www.tamilarangam.net


# சர்வ தேச தமிழர்

Vol.2;Nr.7;July-Aug 1995

Sarvadesa Tamiler: ISSN.0805-7443

**Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & solidarity**

தமிழர்களை முன்னேற்றம்,ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை




சிங்கப்பூர்-ஹாபர்வில்லா



இந்தோனேசியா-பாலி



தாய்லாந்து-அயோத்தி புராதன நகர்



இந்தோனேசியா-ஜகார்த்தா



:வ.க.பரமநாதன்:

உள்ளே:

தமிழரின் தலையாய பண்புகள்.............டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்,பாலக்காடு,கேரளா
ஈழத்துக்கவிஞர் ச.வே.பஞ்சாட்சரமும்,அவர் கவிதைகளும்......வ.க.பரமநாதன்,டென்மார்க்
50 வருடங்களும் அணுகுண்டும்/பனிப்பூக்கள்.....காரையூரான் இ.தியாகலிங்கம்,நோர்வே
தென்கிழக்காசிய பயண அனுபவங்கள்!........................................என்.எஸ்.பிரபு,நோர்வே
மாஸ்கோவில் எனது மறக்கமுடியாத அனுபவங்கள்...ஆரையம்பதி க.சபாரத்தினம்,ரஷ்யா
துன்பமான இலங்கைக்கடிதம்..........................................ஈழத்துச்சகோதரி
நோபல்இலக்கியப்பரிசுத்தேர்வில் தமிழ்மொழியின் திணறல்....சச்சி சிறீகாந்தா,ஜப்பான்
நீலவானத்தில் நிலைத்தபயணம்......எஸ்.எம்.குணாளன்,மலேசியா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள/நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.திலீபன்.22.166733;கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்.ஜ.றோயலா துரொண்கைம்:த.தியாகலிங்கம் ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்;முபாரக் அலி கிறிஸ்ரியன்சாண்ட்:ம.பஸ்ரியன்ஏககண்ட்:பொன்.சிவா:துறம்சோ:கே.சிவராஜா: வார்டோ:

## வாசகர்களம் / Readers' Forum

### அன்புடன் ஆசிரியருக்கு!

'சர்வதேச தமிழர்'இதழ் கண்டு மகிழ்வுற்றோம்.நடுநிலை:பாரபட்சமற்ற இணைப்புநோக்கு;அனைத்துசாராரையும் அடக்கிக்கொள்ளும் பாங்கு நிறையவே பிரதிபலிக்கக்காண்கையில் 'சர்வதேசதமிழர்' நீடு வாழும் என்பது ஊர்ஜிதம்! தங்கள் எண்ணமும். பணியும் என்றும் வாழ வாழ்த்துக்கள் பற்பல!

இன்றைய உலகில் சுயகருத்து ஆக்கிரமிப்பால் தமிழர் குழு.குழுவாகிவிட்டமை நிதர்சனம்! ஆம்,நம் தமிழர் குறிப்பாக இலங்கைத்தமிழர் இந்தஉளப்பாங்கினை அண்மித்த தசாப்தத்தில் உழுதெடுத்ததன் விளைவு தலைமைகள் ஆயிரமாயின. ஆயினும் பரிணமிப்பு யாதெனில் தமிழ் இலக்கிய உலகம் ஏதோ ஒரு பண்பாட்டின் தொனிப்பாட்டில் தமிழ் இலக்கிய உலகுள் ஒருவரை ஒருவர் மதிக்கும் பாங்குடைத்தாய் விளங்குதலாகும். 'சர்வதேச தமிழ'ரும் அவ்விதமாகவே தனித்துவமான பாரம்பரியம் பேணும். என்பதை தங்கள் இதழ் எடுத்துக் காட்டி நிற்கிறது.

இன்று எட்டுத்திக்கும் சென்று செல்வங்கள் குவிப்பதோடமையாது,அதன்மேலாக இலக்கிய,முத்தமிழ்வளர்ச்சியிலும் தமிழர் பல்பரிமாணங்களிலும் ஒருமைப்பாட்டினை வெளிக்கொணர்ந்து பரிணமித்தல் வெள்ளிடைமலை !

அவ்வகையில் 'சர்வதேச தமிழர்' பணி பாராட்டுக்குரியது.

நன்றிகள் பல ! மீண்டும் காண்போம்!!

**கைதையூரான் குமரகுருபரன்**
**இலங்கைத்தமிழ்ச்சங்கம்,**
**414A,Galle Road,Colombo-6**

---

அன்புடையீர்!

தங்கள் உலகத்தமிழர் நல்லிணக்க ஐக்கிய இதழ் 'சர்வதேசதமிழர்'கிடைக்கப்பெற்றோம்.தாங்கள் தமிழ்மண்ணிலிருந்து மிகத்தொலைவில் இருந்தாலும்,நமது கலை,இலக்கிய பண்பாட்டு உணர்வுகளை வளர்த்துவருவதை அறிந்து மகிழ்வுறுகிறோம்.உலகத்தமிழின ஒருங்கிணைப்புமுயற்சி வெல்லட்டும்! வளரட்டும். தங்கள் தமிழ்ப்பணி!

எமது 'அந்தமான்முரசு 'இதழ் 1969ல் 'அந்தமான் தமிழினத்தந்தை'அமரர் சுப.சுப்பிரமணியம் (மணிமொழியன்) அவர்களால் தொடங்கப்பட்டது.1982ல் அவரது திடீர்மறைவுக்குப் பின்னர் நான் இதனைத் தொடர்ந்து நடத்தி வருகிறேன்.

'சர்வதேசதமிழர்' சஞ்சிகையுடன் 'அந்தமான்முரசு' மாற்றீடு செய்ய விரும்புகிறோம்.

**சுப.கரிகால் வளவன் /ஆசிரியர்,**
**PB.295; 315,Aberdeen Bazar,**
**Port Blair,Andamans**
**74101,India**

( 'அந்தமான்முரசு ' இதழுடன் 'சர்வதேச தமிழர்' நட்புறவு,ஒத்துழைப்பு, மாற்றீடு மேற்கொள்ளும். ஆ-ர்)

---

அன்பார்ந்த ஐயா,

தங்களால் எம்நூலகத்துக்கு அன்பளிப்பாக அனுப்பப்படும்,'சர்வதேசதமிழர்' இதழ் கிடைத்துவருவதையிட்டு நன்றிஎமது நூலகவளர்ச்சியில் தங்கள் ஆர்வம் பாராட்டுக்குரியது.மேலும் எம்நூலகத்துக்கு பங்களிப்புகளை எதிர்பார்க்கிறோம்.

**நூலகர்,Eastern University,**
**Vantharumoolai,Chenkaladi**
**Sri Lanka Tel.065-2473 /2302**

---

அன்புக்குரிய ஆசிரியருக்கு,

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்,தற்போது மலேசியாவில் சீனக்கம்பெனி ஒன்றில் பணிபுரிகிறேன்.எமது குடும்பம் அகதி முகாமில் உள்ளனர்.வீடு இராணுவ குண்டு வீச்சால் தரைமட்டமாகிவிட்டது. கோயில்களும் குண்டு வீச்சால் உடைக்கப்படுகின்றன.தமிழர்கள் உண்ண உணவின்றி, மருத்துவ வசதியின்றி மடிகிறார்கள் என தகவல்கள் வருகின்றன. இதனை உலகத்தமிழர் உணர்ந்து இலங்கைதமிழர் பிரச்சனை தீரஉரிய வழிவகை உடன் எடுக்கும்படி அன்புடன் வேண்டுகின்றேன். மலேசிய அரசும் இங்குள்ள இலங்கைத்தமிழர் வதிவிட அனுமதி விடயத்தில் இரக்கமாகஇருக்க மலேசியதமிழ்த்தலைவர்கள் உதவவேண்டும். தங்கள் பேட்டியை,'மலேசியநண்பன்' பத்திரிகையில் கண்டதும் எழுதுகிறேன்.

**ச.மகி - கோலாலம்பூர்,மலேசியா**

---

அன்புடையீர்,

'சர்வதேச தமிழர் ' இதழ்கள் எம் சிற்றிதழ் தொகுப்பில் 1764வது இதழாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.முழுத் தொகுப்பையும் அனுப்பி உதவவும்.:பாதுகாக்கப்படும். நார்வேயிலிருந்து வெளியாகும்,'சர்வதேச தமிழர்'பரவிக்கிடக்கும் தமிழிதலாளர்கட்கிடையிலான ஒருங்கிணைப்பைச் சிறப்பாகச்செய்து வருகிறது.அமைப்புகளையும்,ஆர்வலர்களையும்,இதழ்களையும் விலாசமிட்டுஅறிமுகப்படுத்திவருவது. பெருந்தன்மையான:இணைப்பேற்படுத்துகின்ற ஆக்கபூர்வமான செயல்தங்கள் இச்செயற்பாட்டிற்குத் தலை வணங்குகிறேன்.எம் தொகுப்பில் இதுவரை 1910 வகையான சிற்றிதழ்கள் சேர்ந்துள்ளன. உலகளவில் வெளியாகும்,தமிழ்ச்சிற்றிதழ்களைச்சேகரித்து பாதுகாத்து காட்சிப்படுத்தவேண்டும் என்பதே எம் அவா! இதற்காகவே சிற்றிதழ்செய்தி வெளியிடுகிறோம்.எமது தமிழிதலாளர்களின் எழுத்தோவியங்களைச்சேமிப்போம். பாதுகாப்போம்!உலகின் எந்த மூலையில் தொடங்கப்பட்டாலும்,அந்தச்சிற்றிதழ் பாதுகாக்கப்படின் தமிழின்,தமிழனின் பல்வேறு பரிமாணங்களை நாம் முறைப்படுத்தி வரலாறு காட்டமுடியும்.எந்த இதழும் விடுபடாது;எந்த வரியும்-அவர்களது ஆதங்கமும்,எதிர்பார்ப்பும்,ஏக்கமும் கட்டாயம் சேகரிக்கப்படவேண்டும்.இது தமிழ்கூறும்நல்லுலகத்துக்கானசேகரிப்பு

**பொள்ளாச்சி நசன்-சிற்றிதழ் செய்தி,**
**1,Sampathnagar,Suleswaran**
**patti,Pollachchi 642006,India**

---

## சர்வதேச தமிழர் தகவல் சேவை

1 .மலேசியநண்பன்:மலேசியத்தலைநகரிலிருந்து வெளிவரும் பிரபல தமிழ்த் தினசரி. 'சர்வதேச தமிழர்'சஞ்சிகையின் ஆசிரியரின் பேட்டி:சஞ்சிகையின் முகவரியும் வெளியிட்டு மலேசியதமிழர்கட்கு அறிமுகம் செய்தமைக்கு ஆழமான நன்றிகள்!இத்தினசரியுடன்'சர்வதேசதமிழர்' நட்புறவு,ஒத்துழைப்பு,மாற்றீடுமேற்கொள்ளும்.ஆசிரியர் ஆதி.குமணன், பத்திரிகையாளர் டி.ஏ.விஜயவீரன் மற்றும் ஆசிரியர்குழு,வெளியீட்டாளர்கட்கும் எமது வாழ்த்துக்கள்!நன்றிகள்!

**Malaysia Nanban Daily,**
**9M,Jalan Murai Dua,Batu comlx,**
**Off Jalan Ipoh, Kualalumpur.**
**Tel.6215981/84 Fax.03.6215986**

---

**2.**தமிழ்நேசன்: மலேசியத்தலைநகரிலிருந்து வெளியாகும் பிரபல தமிழ்த்தினசரி.ஆசிரியராக வி.விவேகானந்தன் அவர்களும்,சிங்கப்பூர் பிரதிநிதியாக ஜி.நாகேஸ்வரி அவர்களும் விளங்குகிறார்கள்.எம் இனியவாழ்த்துக்கள்!

**Tamil Nesan,28-Jalan Yew,Pudu**
**PB.10299,55100 Kualalumpur**
**Tel.2216411/495**

---

**3.**தமிழ் முரசு: சிங்கப்பூரில் இருந்து கடந்த 60 ஆண்டுகளாக வெளி யாகும் பிரபல தமிழ்த்தினசரி.நிறுவனர் தமிழவேள் கோ.சாரங்கபாணி ஆவர்.!ஆசிரியர் வை.திருநாவுக்கரசு, வெளியீட்டாளர் ராஜம் சாரங்கபாணி/கைப்ரோ பிரிண்டிங்குக்கும் இனிய வாழ்த்துக்கள்!

**161,Kampong Ambat, #05-03,**
**Goldion Bldg, Singapore 1336**
**Tel.284.0076 Fax.284.2737**

---

**4.**இதயம்:மாதமிருமுறை வெளியாகும் மலேசியச்சஞ்சிகை.ஆசிரியராக எம்.துரைராஜ் உதவிஆசிரியராக திருமதி சாரதா கண்ணன்,மற்றும் கோகிலா(ராகினி), சொர்ணம்,சந்துரு,சரஸ்வதி ஆகியோர் பணிபுரிகின்றனர். இனிய வாழ்த்துக்கள்!

**Vettrie Idhayam Pathibbakam,**
**2-B,Jalan Murai Satu,Batu Cmpl,**
**51200 Kualalumpur,Malaysia.**

---

**5.**மயில்:மலேசியாவின் தமிழ் மாதசஞ்சிகை. ஆசிரியராக சீராகி பணிபுரிகிறார்.எமது இனிய வாழ்த்துக்கள் என்றும் உண்டு!

**Penarbitan Vetri mayil,**
**85A,Jalan Perhention ,Sentul,**
**51100 Kualalumpur,Malaysia**
**Tel.03-4429910**

---

6. சூரியன்:மலேசியாவின் தேசியமாதஇதழ்! நிர்வாகஆசிரியராக திரு.ராமதாஸ் மனோகரன் பணிபுரிகிறார்.எம் இனியவாழ்த்துக்கள்!

**Churian,21,Jl Barat,Wisma T.WU**
**46200 Petaling Jaya, Selangor.**

(சகலமலேசிய இதழ்களும் அன்பளிப்பும்:அறிமுகமும் செய்த திரு.க.மாணிக்கவாசகர் அவர்கட்கு ஆழமான நன்றிகள் ! ஆ-ர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ.தியாகலிங்கம்;போல்வோக்:இரா.விஜய்;போட்ஸ்பியுட்:க.சுரேஷ்கரன் கார்மோய்:பா.பாலேந்திரன்;பிறத்வோக்:எஸ்.தங்கராஜா
பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன் 181.905.0995;ந.பாலமுரளி181.4729336;திருமதி.த.மனோகரன்:மு.ஆறுமுகம் 181.5432126
கிருஷ்ணா வைகுந்தவாசன் 181.542 9787கனடா:பா.சிவலிங்கம்416.4497607;ரி.எஸ்.மூர்த்தி:416.4675723;
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/அண்ணா பல்கலைக்கழகம்/44.23517233161;பேராசிரியர்.ஜ.இராமச்சந்திரன்

சர்வதேச தமிழர்
1995 ஆடி – ஆவணி
தொகுதி.2,இல.7

---

## ஆசிரியர் கருத்து:

---

### தமிழர்களும் ஒற்றுமையும்!

மனிதக்குழுக்கள் ஒற்றுமையாய் இயங்குவது அவர் தம் முன்னேற்றத்துக்கும்,அடிப்படையில் தப்பிவாழலுக்கும் அவசியம்!தம்முள் ஒற்றுமையற்ற மக்கள் கூட்டத்தின் முடிவு,உலகில் சிதறிப்போதலும்,மற்ற இனங்களின் மொழி,கலாசார,பண்பாட்டுச்சுழலில் சிக்கிச்சீரழிந்து மறைந்துபோவதும், நேரடியான அழிவும் ஆகும்.உலகில் எந்த நாட்டில் தமிழர்கள் தம்முள் ஒற்றுமையாக வாழ்கிறார்கள் என்றால் துரதிர்ஸ்டவசமாக விடை, எந்த நாட்டிலும் இல்லை என்பதே!

ஏன் தமிழர்கள் ஒற்றுமையாக வாழ்கிறார்கள் இல்லை என்றால் அதற்குப் பலகாரணங்கள் உண்டு.ஒருதடவை ஒரு பர்மாத்தமிழ்நண்பர்,பொறாமை என்ற பொல்லாமைதான் அதற்குக் காரணம் என்றார்;எதிலும்நிறைவுறா மனவறுமையே காரணம் என்பர் சிலர்;அறியாமை எனும் கல்லாமையே காரணம் என்பர் வேறுசிலர்.

'நான்'எனும் ஆணவம் தமிழர்கட்குள் நிறைய இருப்பதும்;ஆராய்ந்து பாராது மற்றவர் கருத்தை வரட்டுத்தனமாக ஏற்காததன்மையும்;தன் கருத்தை யாரும் விவாதம்,விமர்சனத்துக்கு உள்ளாக்காது அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற சர்வாதிகாரத்தனமும்,சுயநலமும் கூட இந்த ஒற்றுமையீனத்தின் அடிக்கற்களாம் !

தமிழர்வாழும் பலநாடுகளில் வேற்று இனங்களுடன் சேர்ந்து தம் அற்பசுயசலுகைகட்காக தம்மினத்தைக்காட்டிக் கொடுத்து வாழும் சிலதமிழர்கள் தமிழர் ஒற்றுமைக்கு இடியாக விளங்குகிறார்கள்.தமிழருக்குள் தமிழ்,தமிழர் உரிமைப்பாதுகாப்பு எனும் அடிப்படைக் கொள்கையில் ஒற்றுமையும்; வேற்று இனங்களுடன் எம்அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுக்காத வகையில் நட்புறவும் தமிழர் உலகில் தனித்துவமும்,சுதந்திரமும்,கௌரவமுமான இனமாக எம்மொழி,கலாசாரம் பண்பாடு பேணி வாழ உதவும்.இந்து, கிறிஸ்தவ,இஸ்லாமியத் தமிழர்கள் அடிப்படையில் நம்பிக்கை,நட்பு,அன்பு,ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் தன்மையை வளர்க்கவேண்டும்.

## சிந்தனைத்தடாகம்Think Tank

---

மேலைநாடுகளில் பொருளாதாரபேதம் மட்டுமே நிலவுகிறது.இந்தியாவிலோ பொருளாதாரபேதம்,சாதிபேதம், சமயபேதம் எனமூன்றும் நிலவுகிறது. எனவே சமதர்மத்துக்கான போராட்டம் இந்த 3 பேதங்களையும் வீழ்த்தும் போராட்டமாக இந்தியாவில் இருக்க வேண்டும் –சிந்தனையாளன்– 03.95

---

அயல்நாட்டுத்தமிழர்கட்கு ஒன்றைக் கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.இங்கே தமிழகத்தில் இருப்பவர்களை,எதற்கும் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ள வேண்டாம்!காலில் விழுந்துகும்பிடுகிற பழக்கத்தையும்,தலைவர்களை வானளாவப் புகழ்வதான அடிமை மனப்பான்மையையும் உலகில் வேறெங்கும் நாம் காணமுடியாது.தமிழ்நாட்டில்தான் நாம் காணமுடியும்.ஒருவன் உள்ளம் அடிமைப்பட்டுவிட்டால்தான் எதையோ தன்தகுதிக்கு மேல் விரும்பினால் தான்;எதையோ சக்திக்கு மேல் ஆசைப்பட்டால்தான் இது மாதிரி எல்லாம் மனிதன் செய்வான். எனவே இவன் இன்று தமிழனாக இல்லை.தமிழ்மொழிக்காக இல்லை. தமிழ்மானிடத்திற்காக இல்லை என்பதே அதன் பொருள்!
**வே.ஆனைமுத்து– ஆசிரியர், சிந்தனையாளன் (மார்ச் 95)**

---

வித்தகம் அல்ல;விஷயம்தான் புதுக்கவிதையின் உயிர்நாடி!வடிவம் மட்டுமல்ல,பாடுபொருளும் புதிதாக இருந்தால் தான் அது புதுக்கவிதை!
**–டாக்டர் மா.சண்முகசிவா/மயில்**

---

ஒருபாமரன் ஒருகவிஞனைவிட உணர்வானனாகக்கூட இருக்கமுடியும். அவன் மொழியாற்றல் அற்றவனாக இருப்பதால் அவன் கவிதை எழுத முடியாதவனாக இருக்கிறான்.ஆனாலும் சிலநாட்டுப்பாடலைப்பார்க்கும்போது கவிதைக்கும்,கல்விக்கும் தொடர்பில்லையோ? என ஐயமாயிருக்கிறது.–கவிஞர் வைரமுத்து,மயில்03.95

---

சீனர்களின் சிறப்பு என்னவென்றால அவர்கள் அரசியலில் பலபிரிவுகளாக இருந்தாலும் பொருளாதாரத்துறையில் அவர்கட்குள்ள கூர்மையான கவனத்தை யாராலும் கலைக்கமுடியவில்லை–சூரியன்– மே 1995
**அரசியல் கண்ணோட்டம்**

அந்த இந்தியப்பெண்ணுடன் ஒரு வங்காளதேசக்காரன் வந்தான்.
எனக்கு சரியான கோபம்!
அவளிடமே பேச்சுக்கொடுத்தேன்.
யாருங்க இவர்? என்றேன்.
என் காதலர், என்றாள்.
பார்ப்பதற்கு வங்காளதேசக்காரன் மாதிரி இருக்கே! என்றேன்.
ஆமாம்! என்றாள் அந்தப்பெண்.
ஏங்க தமிழ்ப்பையன் யாரும் கிடைக்கலையா? நான் கேட்டேன்.
தண்ணி அடிப்பது,வெட்டுக்குத்து, கொலை,கொள்ளை,கற்பழிப்பு போன்ற செயல்கள்தமிழ்இளைஞர்கள் செய்கிறார்களாம்.பார்த்தாராம்,இவர் ரொம்ப நல்லவனாக இருந்தாராம். காதலிச்சுட்டாராம்!
**எம்.ஜெயபாலன்–சூரியன் மே.95**

---

இப்போது சீறிப்பாய்ந்து புறப்பட்டு வருகிற புதுக்கவிதை,கவிதை இலக்கணத்துக்குப் பொருந்தாது, என ஆயிரம் காரணங்கள் கூறினாலும் புதுக்கவிதை நிச்சயம் நிலைக்கும்.

இனி வருங்காலத்தில்,மரபுக்கவிதைகளை,புதுக்கவிதைக்குச் சவால் விடுக்கும் வகையில்,வடிக்க மரபுக்கவிஞர்கள் முன்வரவேண்டும்.

புதுக்கவிதையை உரைவீச்சு என்று அழைப்பதில் யாருக்கும் ஆட்சேபம் இருக்கமுடியாது.ஆனால் புதுக்கவிதை என்று புதுக்கவிதைக்கவிஞர்களே சூட்டிக்கொண்டிருப்பதால் அதை அவர்களிடம் விட்டுவிடுங்கள்.

புதுக்கவிதைக்கு கடுமையான கட்டுப்பாடு இல்லை.புதுக்கவிதை என்பது பழையகவிதையில் ஒருசிறியமாற்றம் என்றுகூடச் சொல்லலாம்.

புதுக்கவிதைக்கு யாப்பின் கட்டுப்பாடு இல்லை.யாப்பின் கட்டுப்பாடு எங்கு குறைகிறதோ,அங்கு ஓசைநயம் குறைகிறது.

குழந்தைப்பாட்டுக்கு இசைதான் முக்கியம்.இசை இல்லாமல் பாடல் இல்லை.அத்தகைய ஓசையை எழுப்பும் சக்தியை இழந்ததால்,புதுக்கவிதை குழந்தை இலக்கியத்தில் புக முடியவில்லை.
**டாக்டர் பூவண்ணன்–இதயம்,மே95**

---

ஈடுபாடு,நேர்மை,கௌரவம்,அர்ப்பணிப்பு,அறிவாற்றல் ஆகியவற்றின் மூலமே இந்தியசமூகஉயர்வுக்கும்,முன்னேற்றத்துக்கும் வழிகாணமுடியும்.
–டாக்டர்.பி.ராமசாமி–இதயம்,மே 95



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

/ஐ.ஐ.ரி. 2351365/3094 ;திருச்சி:பேராசிரியர்கே.செல்லப்பா -பாரதிதாசன் பல்கலைக்கழகம்;பேராசிரியர் இரா.இரகுபதி/பிசப் ஈபர் கல்லூரி மதுரை:இரா.இரவி புதுச்சேரி:ச.வேல்முருகன் கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:இரா.ஜெயசேதுபதி:: கதிர்.சம்பத்குமார் கேரளா: பேராசிரியர் கே ஏ.ராஜாராம்: ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்.கைதராபாத்:

## மாஸ்கோவில் எனது மறக்க முடியாத அனுபவங்கள்!

---

**ஆரையம்பதி க.சபாரத்தினம்**

---

இலங்கை அரசபிரமாணப்படி இவ்வா றான செலவீனம் செலவிட சரத்து எதுவும் இல்லை.விசேடகாரணங்கட் காக அமைச்சின் முன்அனுமதிபெற் றே செலவுக்கு உரித்துண்டு.பாவம்! செல்லத்துரைக்கு இது எதுவுமே விளங்கக்காரணம் இல்லை.தெரியவே ண்டிய நியாயமோ,அவசியமோ இல்லை.இருந்தும் இதனை எடுத்து க்கூறி அவனது கோரிக்கையை நிறைவேற்றமுடியாமையைக் கூறி னேன்.

பயணம் என்று புறப்பட்டுவந்தபின், விட்டுக்கொடுத்தும்,நெகிழ்ச்சியடை ந்தும் ஒத்துப்போவதே அறிவுடைமை கருமம் எதையும் எண்ணிய பின்பே துணிதல் வேண்டும். துணிந்தபின் எண்ணுவதால் இழுக்கே வரும். அழுக்கு யார் பக்கம் என்பதல்ல இப் போது பிரச்சனை.அழுக்கை அகற்றி அழகைப்பெறுவது எப்படி?என்ற நோக்கில் தான் நம்கருமங்கள் அமைய வேண்டும்.பலமைல்களுக்கு அப்பால் ரஷ்யா வந்து சேர்ந்துவிட்ட பிறகு சண்டை,சச்சரவு,விடாப்பிடி, விதண்டாவாதம் என்ற எதனையும் கைக்கொள்ளாமல் சகிப்புத்தன்மையு டன் முகவருடன் ஒத்துழைத்தே காரியத்தைச்சாதிக்க வேண்டும்.எந் த ஒரு தொழில்முகவருடையநிலையு ம் கிட்டத்தட்ட இதேநிலைதான்.எந்த ப்பாவத்திற்கும் அஞ்சாத அவர்கள் நீதிநியாயத்தை மதித்து நடப்பது வெகு அருமை!நேர்மையற்றவர்களு டன் நேராக மோதினால் உங்களுக் கே அதிகம் நட்டம் ஏற்படும்!உலகம் பணத்துக்கு பல் இழிக்குமே தவிர, நேர்மைக்கு அல்ல.ஆகவே மோதா மல் அவர்களுடன் போய்இருந்து, சமாதானமாக உங்கள் காரியத்தைச் சாதிக்கப்பாருங்கள்! , என்றேன்.

மீண்டும்,மீண்டும் தன்மனதில் ஏற்ப ட்டுவிட்ட அந்தக் கொலைப்பயமுறு த்தலையே வெளிப்படுத்தி,அதனால் மீண்டும் தன்னால் அவ்வீட்டுக்குச் சென்று குடியிருக்கமுடியாதென்று மறுத்துவிட்டான். 'அப்படியானால் பிரச்சனையை எவ்வாறு தீர்த்துவைப் பது? ' எனக்கேட்டேன். 'எப்படியாவது உதவிசெய்யும்படி மன்றாடினார். 'இது முற்றிலும் உங்கள் தனிப்பட்ட விவகாரம்.முகவர் மூலம்தான் நீங்கள் இங்கு வந்தீர்கள்.அவரது ஆலோச னைப்படி நடப்பதுதான் நல்லது.அவர் அனுப்பமுடியாதென்று கூறவில்லை யே!நீங்கள் ஏன் குழப்பவிரும்புகிறீர் கள்? 'என்றேன். 'அவர்கள் நிச்சயம் என்னைக்கொலைசெய்துவிடுவர். இது எனக்கு விளங்குது.அதனால் நான் திரும்பிப்போக மாட்டேன்! 'என் றான்.

முகவர் வீட்டுதொலைபேசி இலக்கம் தன்னிடம் இருப்பதாகவும்,அவருடன் தொடர்புகொண்டு கதைக்கும்படியும் அவன் வேண்டினான்.அதுவும் நல்ல யோசனையாகவே எனக்குப்பட்டது. அந்த இலக்கத்துடன் தொடர்புகொ ண்டேன்.முகவர் குமாரநாயகத்துடன் பேசக்கேட்டேன்.அவர் இல்லை!என்ற பதிலே கிடைத்தது.எங்கே ?என்று கேட்டேன்.அவர் லெனின்கிராட் போய்விட்டதாகவும்,மறுநாள் தான் வருவதாகவும் மறுமுனை பதில் கூறி யது.

'அவருடன் சம்பந்தப்பட்ட விடயங்க ளை வேறு யாருடன் பேசலாம்?இலங் கைத்தூதரகத்திலிருந்து பேசுறம் ' 'என்ன பிரச்சனை? '

'செல்லத்துரை என்று ஒருவர்!கொக் குவில் சொந்தஇடம்!இங்கு வந்து நிற்கிறார்.இலங்கைக்கு திரும்பிப் போகவிரும்புகிறார். '

'அது எங்களது பிரச்சனை! '

'அது எங்களுக்கும் பிரச்சனைதான். அதனால்தான் தொடர்புகொள்கிறன் இங்கு அவரை தத்தளிக்கவிடாமல் விரைவில் திருப்பிஅனுப்புங்கள்!அவர் இங்கு முறையிட்டுள்ளார்.அதனால் தலையிடவேண்டிய கட்டாயத்தேவை!' 'யாராக இருந்தாலும் எமது சொந்தப் பிரச்சனையில் தலையிடமுடியாது. ' 'அப்படியா?எது சொந்தப்பிரச்சனை? ஊரான்ரை காசை சுருட்டிகொண்டு ஊர் சுற்றிக்காட்டிவிட்டு,நடுவீதியில சனங்களை அலையவிட்டது,சொந்த ப்பிரச்சனையா?

இலங்கைப்பிரசை ஒருவர் வெளிநா டொன்றில் பிரச்சனையை எதிர்நோ க்கும் பட்சத்தில் தூதரகம் தலையிட் டு நீதிபெற்றுக்கொடுக்கவேண்டிய பொறுப்பு உண்டு!நீங்கள் நீதியாய், நியாயமாய் நடந்திருந்து,எமக்கு எது வித முறைப்பாடும் இல்லையென் றால் மட்டுமே இது உங்கள் சொந்தப் பிரச்சனை! '

'ஐயா! ஆத்திரப்படாதீங்கோ!இப்போ முகவர் இங்கில்லை!வந்ததும் அவருக்குச் சொல்கிறோம்!

'அப்படியல்ல!அவர் இல்லாவிடினும் ,அவரது பிரதிநிதி இங்கு வந்து விட யத்தை 'செட்டில் 'பண்ணவேண்டும்!' 'சரி ஐயா! இரண்டுபேரை அனுப்பி வைக்கிறேன்! '

மூன்றுமணிநேரம் போயும்,எவரும் வந்ததாக இல்லை.மணி பகல் 1.30 ஐ நெருங்கிவிட்டது.முகவரின் திருகு தாளம் புரிய நேரமா செல்லும்?மீண் டும் டயல் செய்தேன்!

'நீங்களாகவே வருகிறீர்களா?அல்லது பொலிசை அனுப்பி கூட்டிவரச்சொல் லவா? '

'ஐயா!நம்ம ஆட்கள் புறப்பட்டுவிட்டன ர்.இப்போது நடுவழியில் வந்துகொ ண்டிருப்பர் என நினைக்கிறேன்! '

'இவ்வளவு நேரமாகவா!இன்னும் அரைமணியில் இங்கு ஆட்கள் வந்து சேரத்தவறினால் அங்கு பொலிஸ் நி ற்கும்!தகுந்தநடவடிக்கை எடுக்கும்' இருவரல்ல! மூவர் வந்தனர்.அவர்கட் கு தெளிவாக நிலைமை விளக்கிக் கூறப்பட்டது.

'தொழில்முகவர்களால் எங்களுக்குப் பெரியதொல்லை!பணத்தைப்பெற்று க்கொண்டால் பக்குவமாக அந்தப்ப ணியை முடித்துக்கொடுப்பதுதான் நாணயம்!சுத்துமாத்து செய்வதாயின் பிரச்சனையும் வளரும்.பலருக்கும் சிக் கல்!பெயரும் கெடும்! '

'முகவர் திங்கட்கிழமை வருவார். வந் ததும் ரிக்கற் 'புக் ' பண்ணி உடனே ஆளையனுப்பிவிடுகிறோம்!அதுவரை வந்து எங்களுடன் தங்கியிருக்கட்டும் எனக்கும் அந்த யோசனை சரியாக வே பட்டது.

'இடமில்லாத செல்லத்துரையேவேறு எங்கே போவீர்?ஏதோ இன்னும் 2-3 நாட்களுக்கு இவர்களுடன் போய் இருந்துவிட்டு திங்கட்கிழமை முகவ ர் 'டிமிக்கி'கொடுத்தாரென்றால் திரும்பவும் வாரும்.வேறு வழி பார்ப் போம்! 'என்றேன்.

'நான் அங்கே போகமாட்டேன்.என் னைக்கொலை செய்துபோடுவாங் கள்!......என்றான்,செல்லத்துரை!

'ஐயா! இவருக்கு கொஞ்சம் மூளை பிசகு! அதுதான்.! 'என்றனர் மூவரும். 'இல்லை!இல்லை!! மூளை சரியாகத் தொழிற்படுவது செல்லத்துரைக்குத் தான்!அவர் பைத்தியமல்ல!நீங்களும் அவரைப்பைத்தியமாக்க வேண்டாம்!' என்றேன்.செல்லத்துரை இறுதிவரை மறுத்துவிட்டான்.

'அப்படியானால் செல்லத்துரை எங்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





க.சபாரத்தினம்;

தங்கப்போகிறீர்? 'இது நான்.
'பொலிசில் தங்கி இருப்பேன் ஐயா!'
'அப்ப சரி! பொலிசில் தங்கிவிட்டு திங்கட்கிழமை காலை 10மணிக்கு செல்லத்துரையும்.ரிக்கட்டுடன் முகவரும்வாருங்கள்!எல்லோருமாகத்தீர்மானிப்போம்!' என்றேன்.

அந்த மூவரும் செல்வத்துரையை அப்புறமாக அழைத்து ஏதோ சம்பாசித்தனர்.செல்லத்துரை அடம் பிடித்ததாகவே தெரிந்தது.பின்பு எல்லோரும் ஒன்றுகூடிச்சென்றுவிட்டனர்.

திங்கட்கிழமையன்று செல்லத்துரையோ,முகவரோ,அன்றேல் அந்த மூவரோ தூதரகத்துக்கு பிரசன்னமாகவில்லை.பிரச்சனையைத் தாமாகவே தமக்குள் தீர்த்துக்கொண்டார்கள், போலும் என எண்ணினேன்.

அடுத்தநாள் செவ்வாய்க்கிழமை!இடி போல் அந்தச்செய்தியைக்காவிக் கொண்டு வந்தனர்,நால்வர்.பழைய மூவருடன் புதிதாக ஒருவர்!
'ஐயா!செல்லத்துரை,4 ம் மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டான்.நேற்று இரவு சம்பவம் நடைபெற்றது.ஜேர்மனியிலுள்ள அவரது சகோதரன் கணேசமூர்த்திக்கு அறிவித்துள்ளோம்.அவர் இங்கு வருவதாகக்கூறியுள்ளார்.அதுவரை பிரேதத்தை அடக்காமல் வைத்திருக்கும்படி வைத்திய சாலைக்கு அறிவித்து விடுங்கள்! 'என்றனர்.
செய்தியைக்கேட்டதும்,என்னை நான் மறந்தேன்!
'ஒரு உயிர் அவம்போய்விட்டதா?நீங்கள் கொலைசெய்துவிட்டு இங்குவந்து போலிச்சாட்டு கூறுகிறீர்கள்!அன்று அவன் படித்துப்படித்துக் கூறினானே! -போனால் என்னைக்கொலை செய்து விடுவார்கள்,என்று!அது சரியாகிவிட்டது!பிரச்சனையை சமாதானமாக அல்ல,சாமர்த்தியமாக முடித்துவிட்டீர்கள்!என்று ஆத்திரம்தீர கத்தினேன்.என் உறவினர் ஒருவரை இழந்தது போன்ற துயரம் என்னுள் உருவெடுத்தது.செல்லத்துரையின் அப்பாவி முகமும்,அவனது கள்ளம்கபடமற்ற பேச்சு அசைவுகளும் மனக்கண்முன் நிழலாடின. 'ஐயா!இப்ப என்ன சொல்கிறீர்கள்!என்று என்னைப்பார்த்து ஏளனமாகக்கூறுவது போல் ஒரு தோற்றம்!
'என்ன என்ன பொறுப்பில உள்ளவனோ!யார் யாருக்கு கடமைசெய்ய வேண்டியவனோ!
கொலைகாரக்கும்பல்,பிணமாக்கிவிட்டதே!4ம்மாடியிலிருந்து வீழந்தாலும் சாவதா?இது சுத்தப் பொய்!என்று உரத்துக்கூறினேன்.
அவர்கள் நால்வரும் ஆளை ஆள் பார்த்துக்கொண்டிருந்தனர்.
'ஜேர்மனியிலுள்ள அவரது சகோதரன் இங்கு வந்ததும் அழைத்துவாருங்கள்! 'என்றேன்.
'சரி!ஐயா!! 'என பவித்திரமாக கூறினர்.இருநாட்களில் அண்ணன் கணேசமூர்த்தியும்,மனைவியும் ஜேர்மனியிலிருந்து வந்திறங்கினர்.
வாட்டசாட்டமானஉருவம்!அவசர அவசரமாகக் காரியத்தை முடித்துவிட்டு ஓடும் துரிதம் தெரிந்தது!அவர் பாவனையில் உயிரின் மதிப்பை பணத்தில் மதிப்பிடும் ஒருவர்போலவே எனக்குத்தோன்றினார்.அவரை அழைத்து செல்லத்துரை உங்களுக்குத்தம்பியா?என வினவினேன்.
'ஒன்றுவிட்ட தம்பி,தகப்பன் இரண்டு; தாய் ஒன்று!'
'வேறு நெருங்கிய உறவினர் யாரும் இல்லையா?'
'இல்லை! அவருக்கு மூளை சரியில்லை!என்னுடன் இருந்தவர் ஓடிவந்திட்டார். குடும்பத்திலும் பிசகு!'
பதில்,சகோதரபாசத்தை வெளிப்படுத்துவதாக இல்லை.
'சரி!செல்லத்துரையின் மரணத்தில் சிறு சந்தேகம் எனினும் சொல்லுங்கள்!நான் முடிந்தஉதவி செய்கிறேன்.
இடையே விம்மி அழ ஆரம்பித்து, அந்த மங்கைநல்லாள் ஏதோ கூற முற்படுகையில் கணேசமூர்த்தியின் அதட்டல்,அவளை நிலைகுலையச் செய்து அப்படியே சிலையாக ஆக்கிவிட்டது. என்னை நோக்கிக் கணேசமூர்த்தியே கூறினார்,
'எங்களுக்கு சந்தேகம் ஒன்றும் இல்லைப் பாருங்கோ!
அவன் ஒரே..... இந்தமாதிரித்தான்!'
அந்தப்பதிலால் என்மனம் ஆறுதல் அடையவில்லை! இருந்தாலும் என்ன செய்வது?
'செல்லத்துரையே! என்னை மன்னித்துவிடு!உனக்கு உதவமுடியாத நிலையை எண்ணி இன்னமும் மனம் கலங்கித்தவிக்கிறேன்.
உன்னைப்போல் இன்னமும் எத்தனை எத்தனை தமிழர்,வெளிநாடுகளில் தம் உயிரை அநாவசியமாக இழந்தனர்!ஆற்றில் அடித்துச்செல்லப்பட்டனர்!அடக்குமுறைக்கு பலியாகினர்!குளிரில் செத்தனர்!காற்றின்றி மூடியவாகனங்களில் மாண்டனர்.
இறைவா!தமிழர் துன்பத்துக்கு முடிவு எப்போ? (வளரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

0230474391; டென்மார்க்:சு.யோகேந்திரம்,வ.க.பரமநாதன்; பிரான்ஸ்: செ.ஜெயகுமார்;த.தர்மசீலன்1.43759171; இ.கிருபானந்தன்
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்41.684549 விதுரன்; க.சண்முகலிங்கம் பி.ஏ.எல்.எல்.பி.மா.தேவகௌரி பி.ஏ.சிறப்பு
கைதையூரான் குமரகுருபரன் பி.காம்.;கௌரி ராஜசுந்தரம் யாழ்ப்பாணம்:திருமதி.பி.ஹம்சானந்தி; செ.நடராசா

## நோபல் இலக்கியப்பரிசுத் தேர்வில் தமிழ்மொழியின் திணறல்!

---

சச்சி சிறீகாந்தா—ஜப்பான்

---

1901 தொடக்கம் வருடாந்தம் நோபல் இலக்கியப்பரிசு சுவீடனில் இலக்கிய அகாடமியால் வழங்கப்பட்டுவருகிறது. இதுவரை வழங்கப்பட்ட இலக்கியப்பரிசுகளின் புள்ளிவிபரக் கணக்கெடுப்பை நோக்கின்,எண்ணிக்கையில் நான்கில் மூன்றுபங்கு பரிசுகள்,நான்கு மொழியிலே இலக்கியம் படைத்த அறிஞர்கட்கு சென்றுள்ளன.ஆங்கிலம்,பிரெஞ்சு,ஜேர்மன்,ஸ்பானியம் ஆகியவையே இந்நான்கு மொழிகளாம். இவை தவிர மேலும் பத்துப்பதினைந்து மொழிகளில் இலக்கியம் படைத்த மேதைகளும் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.ஆனால் தமிழ்மொழிப்படைப்பாளிகட்கு அருகில் வராமல் இன்னும் நோபல் அதிர்ஸ்டதேவதை விலகியே நிற்கிறாள்.இதற்குரிய காரணங்கள் என்ன?

ஆசியாவின் இலக்கியகர்த்தாக்களில் ஜப்பானியமொழியில் இலக்கியம் படைத்த யசுநாரி கவபாத்தாவும்(1968) கென்சபுரோ ஏஓயும்(1994);வங்காள மொழியின் மாமேதை இரவீந்திரநாத் தாகூரும்(1913)நோபல் இலக்கியப் பரிசால் கௌரவிக்கப்பட்டுள்ளனர். இந்நூற்றாண்டின் இணையற்ற தமிழ்இலக்கியகர்த்தாக்களாக நாம் கருதக்கூடிய சுப்பிரமணியபாரதி, அறிஞர் அண்ணா,மு.வரதராசன், அகிலன்,கவிஞர் கண்ணதாசன், எஸ்.பொன்னுத்துரை போன்றோர் நோபல் இலக்கியப்பரிசுபெறும் தகுதி உடையவர்களேஎனினும் ஏன் இவர்கட்கு இப்பரிசு கிடைக்கவில்லை? கடந்த 10 ஆண்டுகளாக விஞ்ஞான நோபல்பரிசுகளின் வரலாற்றை நான் ஆராய்ந்த அனுபவத்திலே குறிப்பிடக்கூடியது என்னவெனில்,நோபல்பரிசுத்தேர்வில் தமிழ்மொழியின் திணறலுக்கு பல காரணங்கள் உண்டு.

முதலாவது,நோபல்பரிசுத்தேர்வுக்கு முதற்படியானது தராதரம் பெற்றுள்ள இலக்கியப்படைப்பாளிகளின் பிரேரிப்பு! தமிழ்மொழி இலக்கியகர்த்தாக்கள் இதுவரை என்றாகிலும் பரிசுக்குப் பிரேரிக்கப்பட்டார்களா?என்பது கேள்விக்குறியே! சுயபிரேரிப்புகள் நோபல் பரிசுத்தேர்விலே புறக்கணிக்கப்படுகின்றன.தகுதிபெற்ற தமிழ்மொழி அறிஞர்கள்(தமிழரல்லாத. மேல்நாட்டுப்பல்கலைக்கழகங்களில் தென்னாசிய இலக்கியவரலாறு போதிக்கும் பேராசிரியர்கள்)அல்லது முன்னாள் நோபல் இலக்கியப்பரிசு(அல்லது சமமாக ஒப்பிடக்கூடிய புலிட்சர்/புக்கர் பரிசுகள்) பெற்ற படைப்பாளிகள், தமிழ்இலக்கியகர்த்தாக்களின் ஆக்கங்களை வாசித்து,சீரணித்து அவற்றின் சுவையை நோபல் இலக்கிய பரிசுத்தேர்வுக்கு பிரேரித்துள்ளார்களா? என்பதும் சந்தேகத்துக்குரியதே.

இரண்டாவது காரணம்,தமிழ்இலக்கியத்தை மூலத்தில் வாசிக்கமுடியாத பிறமொழி அறிஞர்கட்கு ,மொழிபெயர்ப்பிலாவது வாசிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை இதுவரை தமிழ்இலக்கியவாதிகளும்,பிரசுரிப்பாளர்களும் அமைத்துக்கொடுக்காததே.தற்போது அதிகபாவனையிலிருக்கும் சர்வதேசமொழிகளில் தமிழ்மொழியின் தரம்வாய்ந்த தற்காலஇலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளனவா?ஆங்கிலம்,பிரெஞ்சு,ஜேர்மன்மொழிகளிலே தமிழ்மொழிஇலக்கியங்கள் மொழிபெயர்க்கப்படாவிட்டாலும், நோபல் இலக்கியபரிசுத்தெரிவுக்குழுவினருக்கு தெரியப்படுத்தக் கூடியதாக ஸ்கண்டினேவிய மொழிகளில்(சுவீடிஷ்,நொஸ்க்,டானிஷ்)சில தரம்வாய்ந்த தமிழ்இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்படவேண்டிய தேவை உண்டு. தமிழர்களிலே இப்போது,ஸ்கண்டினேவிய மொழிகளில் பரிச்சயம் உள்ளோர் இச்சேவையை ஆற்றமுன்வரவேண்டும்.

மூன்றாவது காரணம்,நோபல்பரிசுகள் யாவும்(இலக்கியப்பரிசு உட்பட)உயிருடன் இருப்பவர்கட்கே வழங்கப்படுகிறது.காலமானவர்கட்கு வழங்கப்படுவதில்லை.இந்த விதியின்படி அறிஞர் அண்ணா,கவிஞர் கண்ணதாசன் போன்றோர் இப்பரிசிற்கு நியமிக்கப்படமுடியாது.எனவே ஏற்கனவே குறிப்பிடப்பட்ட இரண்டாவது காரணத்தையும் இணைத்துப்பார்க்கும்போது, இப்போது உயிருடன் இருக்கும்,தமிழ் இலக்கியகர்த்தாக்களின் ஆக்கங்கள் தான் கூடியவிரைவில் சர்வதேச மொழிகளில் மொழிபெயர்க்கப்படவேண்டியதேவை உள்ளது.சுப்பிரமணிய பாரதியின் படைப்புகளைப் பாராட்டி கடந்த 50 ஆண்டுகளிலே ஆயிரக்கணக்கான புத்தகங்கள் குவிந்துள்ளன.இவை யாவும் அவர் காலமாகிய பின் பிரசுரமானவையே.அவர் உயிருடன் இருந்தபோது,ஏதாவது தகுதி வாய்ந்த நூல்கள் பாரதியின் படைப்புக்களின் சிறப்பைப்பற்றி வெளியாகியுள்ளனவா?இல்லை என்றே நான் கூறுவேன்.எனவே உயிருடன் இருக்கும் தமிழிலக்கிய கர்த்தாக்களைப் பற்றி,அரசியல், மத,நாட்டு வேறுபாடு இன்றி தரத்தை மட்டும் குறியாகக் கொண்டு விளக்குவிக்கும் விமர்சகர்கள் பலர் தமிழரிடையே குறைவு.

நான்காவது காரணம்,தமிழ்மொழியின் அரசியல்அனாதைநிலை.தற்போது தமிழ்மொழிபேசப்படும் எந்தநாட்டிலும்,தமிழ்மொழி உத்தியோகபூர்வமான அனாதையாகவும்,உத்தியோகபூர்வமற்ற அனாதையாகவும் தகுதி பெற்றுள்ளது.சிறீலங்காவிலும்,சிங்கப்பூரிலும் தமிழ் உத்தியோகமொழியாகப்பிரகடனப்படுத்தப்பட்டுள்ளபோதும்,சிறீலங்காவில் சிங்களமொழிக்கும், சிங்கப்பூரில் சீனமொழிக்கும் உள்ள அந்தஸ்து,சலுகைகள் மற்றும் சிபாரிசுகள் தமிழ்மொழிக்கு இல்லை. இந்தியாவிலோ தமிழ்மொழிநிலை, இந்தி தவிர்ந்த 'பத்தோடு பதினொன்று' என ஒடுக்கப்பட்டநிலையே. நோபல் இலக்கியப்பரிசுகளில் நான்கில் மூன்று பங்கு,உலக அரசியலில் உன்னதம் வகித்த/வகிக்கும் நான்குமொழிகட்கு கிடைத்துள்ளது, எனும் புள்ளிவிபரம்,தமிழ்மொழியின் அரசியல் அனாதைநிலையை அப்பட்டமாக விளக்குகிறது. ஐம்பது மிலியனுக்கும் மேலானோரால் பேசப்படும் உயர்இருபது(top twenty) உலகமொழிகளிலே தமிழ் இப்போது அடங்குகிறது எனினும், தமிழ்மொழியின் அரசியல் அநாதை நிலையால் பத்துமிலியன் பேர் கூடப் பாவிக்காத சுவீடிஷ்,நோர்வே,டானிஷ், ஐஸ்லாண்டிக்,ஹீப்ரு,யிட்டிஷ் மொழிகளுக்குக் கிடைத்துள்ள நோபல் இலக்கியப்பரிசுத் தராதரம் பெறமுடியாமல் தத்தளிக்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்குக்கிடைத்துள்ள இந்தத்தாழ்நிலை, இருபத்தோராம் நூற்றாண்டில் மறையுமா?மறையத்தான் வேண்டும்!

---

(சமாதானம்/விஞ்ஞானம்/இலக்கியம்/பொருளியல் நோபல் பரிசுகட்கு தகுதியான தற்காலத் தமிழர்களை 'சர்வதேச தமிழர்'மூலம் அறிமுகம் செய்து,(உலகத்தமிழர் அமைப்புகளின் சிபாரிசுக்காக)உதவ வாசகர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.ஆ-ர்.)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டக்களப்பு:கோபி.ரவி:மாத்தளை: எம்.அருள்பிரகாஸ்; தவ.சஜிதரன் திருகோணமலை:மதுமாரி ,செ.கனகரத்தினம் கண்டி: எஸ் மயில்வேந்த ன்; அட்டன்:பாலா சங்குப்பிள்ளை:குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; சுவிற்சலாந்த்:எஸ்கதிர்காமநாதன்: 41.12724336; இரா. கலாதரன்:அமெரிக்கா: செ.பாஸ்கரன்; ஜே.ஜோர்ஜ் அவுஸ்திரேலியா:லெ.முருகபூபதி:

# தென்கிழக்காசிய பயணஅனுபவங்கள்!



Wat Arun. one of Bangkok's most memorable landmarks

தமிழ்,தமிழர் பற்றிய நிலைமையை அறியவேண்டி ஒரு உத்வேகமும்:14ம் நூற்றாண்டில் இராஜேந்திரசோழன் போன்ற தென் இந்திய வீரமிகுதமிழ் அரசர்கள் விட்டுச்சென்ற சின்னங்களான இந்துஆலயங்கள் பற்றி நேரில் பார்த்து அறிந்து கொள்ளும் ஆர்வமும் தென்கிழக்காசிய நாடுகளான இந்தோனேசியா,தாய்லாந்து,மலேசியா,மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளை சுற்றுப்பயணம் செய்யத்தூண்டிற்று.நாடுகளை சுற்றிப்பார்ப்பதும் பல்லினபன்மொழி,பல்கலாசாரமக்களை சந்திப்பதும் அவர்கள் வாழ்க்கை முறை பற்றி அறிந்துகொள்வதும்: மனிதவாழ்வுக்கு அவசியமானது: அது மிகவும் சுவையானதும் கூட! எமது தமிழர் மலேசியா,சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற நாடுகளில் பிரிட்டிஷ்காலத்தில் குடியேறியதும் அங்கு பல்லாண்டுகளாக வாழ்ந்து வருவதும் அவர்கள் வாழ்க்கைமுறை மொழி பற்றியநிலைகளை அறிவதும் அவர்களுடன் உரையாடுவதும் கூட இந்தப்பயணத்தின் நோக்காகும்.

எமது பயணம் 04-07-95 அன்று ஒஸ்லோ விமானநிலையத்திலிருந்து பகல் சுமார் 12 மணிக்கு ஆரம்பமாகியது.மாஸ்கோவில் எமது 'சர்வதேச தமிழர்'இணைப்பாளர்களான, ஆரையம்பதி திரு.க.சபாரத்தினம்:செல்வி வளர்மதி இரத்தினசிங்கம் அவர்களையும்,சந்திப்பதாக முதலில் தொலைபேசிமூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.நாம் மாஸ்கோவை அடைந்ததும், அங்கே வழமைபோல் பல தமிழர்கள் -பெண்கள்,இளைஞர்கள்,குழந்தைகள் இலங்கையிலிருந்து ஏஜென்சிகளால் கொண்டுவரப்பட்டு,பாஸ்போட். விசா மோசடி என கண்டுபிடிக்கப்பட்டு அல்லல் உறும் அவலம் கண்ணில் பட்டது.பலர் உணவின்றியும்:குடிநீர் இன்றியும் வாடினர்.எம்மிடம் இருந்த சில உணவுவகைகளை அளித்து,குடிநீரும் வழங்கி அவர்கட்கு ஆறுதல் கூறி ஆசுவாசப்படுத்தினோம்.

'ரான்சிற் ' கவுண்டரில் தொடர்பு கொண்டு திரு.சபாரத்தினம்:செல்வி வளர்மதி அவர்கள் வருகையை அறிந்து,வெளிப்புறம் தொடர்பான கவுண்டரில் சென்று அவர்களுடன் உரையாடிமகிழும் சந்தர்ப்பம் கிடைத்தது.

நண்பர் சபா அவர்கள் தனது கையால் சமைத்த உணவுப் பொட்டலத்துடன் வந்து எம்மை ஆச்சரியத்துக்குள்ளாக்கினார்.அவரது நளபாகத்தைச் சுவைக்கும் அருள் அடியேனுக்கும் கிடைத்தது.மிக அருமையாகவே சமைத்திருந்தார்.நேரில் தெரியாவிடினும்,இலக்கிய நட்பு ஒரு நெருங்கியநட்பை உருவாக்கியது. செல்வி வளர்மதி ரஷ்யமொழியில் சரளமாக அங்குள்ள ரஷ்யஅதிகாரியுடன் உரையாடியது,நம்மவர் எங்கெல்லாம் எத்தனை, எத்தனை பாசைகளை பேசுகின்றனர் என மகிழ்வையும் ஆச்சரியத்தையும் ஊட்டியது. அவர்களுடன் நேரம்போவதே தெரியாமல் உரையாடிக்கொண்டிருந்த போது கண்டிப்புகலந்த அந்த ரஷ்ய அதிகாரி நேரம் போவதாகக்கூறி எமது உரையாடலை ஒரு முடிவுக்கு கொண்டுவந்தார்.மகிழ்வுடன் எமது உரையாடல் முற்றுப்பெற்றது.தான் பலகுரலில் பேசிய ஒலிநாடா உரைச்சித்திரத்தை அன்புடன் அளித்த சபா அவர்கள் அவற்றை நோர்வே சென்றதும் ரசிக்கும்படி கூறினார்.இங்கு வந்ததும் அதனைப்போட்டுக் கேட்டு உண்மையிலேயே மிக ஆச்சரியம் அடைந்தேன்.இலங்கைஅரசியல்நிலை,கிழக்கில் தமிழ்-முஸ்லிம்உறவுகள், மட்டக்களப்பு நாட்டுப்பாடல், இந்துசமயதத்துவங்கள் என பல்வேறு தலைப்புகளில் இருவரிடையேயான சம்பாசணையை அவரே பலகுரல்களில் பல்வேறு துணைப்பாத்திரங்களாகவும் பங்கேற்று ஆக்கம் செய்திருந்தமை வியப்பூட்டியது.

அவர்களிடம் விடைபெற்று,அமர்ந்த போதுதான் மலேசிய தமிழ்இளைஞர் ஒருவர் அறிமுகமானார்.

நீண்டசடாமுடியும்,மீசையுமாயிருந்த இவர் பெய ர் இராமன் பரமசிவம் ஆகும். இங்கிலாந்து,வேல்ஸ் பல்கலைக் கழகத்தில் மின்சாரபொறியியலாளராக பயில்கிறார்.தாயார் தோட்டத்தொழிலாளியாக இன்றும் திடகாத்திரமாகப்பணிபுரிகிறாராம்.தான் தோட்டப் பகுதியிலிருந்து படித்து முன்னேறியதை பெருமையுடன்குறிப்பிட்டார். மலேசியா ஒரு, பல்லின,பல்சமய, பன்மொழி மக்கள் அமைதியுடன் வாழும் பூங்கா என குறிப்பிட்டார்.மலே,சீனர் தமிழர் மற்றும் இந்தியர் ஒற்றுமையுடன் வாழ்வதாக பெருமைப்பட்டார். இவரது பேரனார் 1930ல் இரப்பர் தோட்டத்தில் பணிபுரிய தமிழ்நாட்டிலிருந்து மலேசியா வந்தாராம். தற்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிதன்.ஆபிரிக்கா:திருமதி.கமலா.வேலுப்பிள்ளை புருணை: எம்.ஐ.எம்.நகப் யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்:மு.பத்மா
கு.இரஞ்சகுணாளன் மலேசியா:க.மாணிக்கவாசகர் இந்தோனேசியா: மெடான்:எம்.நாகலிங்கம்:மு.சந்திரசேகரன்:பி.கிருஷ்ணா
ஜகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு;நா.சங்கரன்;லட்சுமணன் பர்மா:அப்துல் ரசாக்





மலேசியா-பத்துமலை

போதைய தோட்ட இளைஞர்கள் கல்வியில் முன்னேறி நகரவாழ்வுக்கு பலர் குடிபெயர்ந்து வருவதையும் குறிப்பிட்டார்.எனினும் தோட்ப் பகுதி வாழ்வு நகரவாழ்வைவிட மிக மலிவாகவே இருப்பதாககுறிப்பிட்டார்.நகரத்தில் வீட்டுவாடகை.தண்ணீர் வரி என செலவு அதிகம் என்கிறார்.

தனது படிப்புமுடிய தொழில் எடுத்த பின் தமிழர் முன்னேற்றத்துக்கு உழைக்கவிருப்பதாக குறிப்பிட்டார். ஈழத்தமிழர் போராட்டம் நியாயமான பேராட்டம் என தாம் நம்புவதாயும், அங்குள்ள சகலதமிழரும் ஒற்றுமையாக இருக்கும்படியும் அன்பாகக் கேட்டுக்கொண்டார்.விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றி மலேசியத்தமிழர்கள் மட்டுமன்றி உலகத்தமிழர்களும் வியப்படைவதாயும்;தனது வாழ்த்துக்களை மலேசிய தமிழர் சார்பில் 'சர்வதேசதமிழர்' மூலம் கூறவிரும்புவதாயும் கூறினார். 'ஈழத்தமிழர்க்குத் தனிநாடு ' என்பது பெருமைப்படவேண்டிய விடயம் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது,என அவர் வலியுறுத்தினார்.

மலேசியாவிலிருந்து தமிழ்நேசன், மலேசிய நண்பன் போன்ற பத்திரிகைகளும்,மயில்,இதயம்,சூரியன்,நயனம் போன்ற சஞ்சிகைகளும் தமிழர்கட்கு தகவல்,அறிவுக்கும்,பொழுது போக்குக்கும் விருந்தளிக்கின்றன என பத்திரிகைத்துறை பற்றிக் குறிப்பிட்டார்.

மலேசியகல்வி பற்றிக் குறிப்பிடுகையில் மலேமொழியில் உயர்தரம்வரை பயிலும்தமிழ்மாணவர்கள் தமிழை ஒருபாடமாக படிக்கிறார்கள்.2வது மொழியாக ஆங்கிலம் உண்டு.3ம் மொழியாகவே தாய்ப்பாசை உண்டு. மலேயர்கட்குத் தான் பொதுவாகத் தொழில் வாய்ப்பில் முதலிடம் எனினும் திறமைக்கு இங்கு மதிப்பளிக்கப் படுவதாகக்குறிப்பிட்டார்.

இங்கு விலைவாசி பற்றிக்குறிப்பிடுகையில் நகரத்தில் 1000 மலேசியன் றிங்கிட் ஒரு சராசரிக்குடும்பத்துக்கு செலவுக்கு தேவை எனில் அதே குடும்பத்துக்கு 300 றிங்கட் தோட்டப்பகுதியில் போதுமானது என்கிறார். மின்சார பொறி யியலில் டிப்ளோமா பயின்றவர் சாதாரணமாக 700 றிங்கிட் ஊதியமாகப் பெறமுடியுமாம். அதே சமயம் குடும்பத்தில் இருவர் சம்பாத்தியம் நகரத்தில் வாழத் தேவை என்கிறார் இவர்.இவரது மனைவியார் இலிகிதர் ஆகப் பணிபுரிவதாகக் குறிப்பிட்டார். செலாங்கூரில் இவரது பாரியார் பணிபுரிந்து வருகிறார்.தாயார் ரோசம்மா பல மைல் தொலைவே எஸ்டேட்டில் வாழ்ந்து வருகிறார்.

மலேசியஅமைச்சர் திரு. டத்தோ சாமிவேலு பற்றி குறிப்பிடுகையில் தமிழர்க்கு மிகவும் உதவுபவராக இருப்பினும்,அவரிடம் சற்று சர்வாதிகாரத்தன்மை இருப்பதாக கருத்துநிலவுவதாகக்குறிப்பிட்டார்.அவருக்கு ஆதரவு உள்ளதுபோல் நிறைய எதிர்ப்பும் இருப்பதாக கூறினார். மலேசியா எங்கும் இந்துக் கோவில்கள் தமிழர் வாழும் இடமெல்லாம் இருப்பதைக்குறிப்பிட்ட அவர், 'கங்கை முதல் கடாரம் வரை 'தமிழ் அரசர்களால் வெற்றிகொள்ளப்பட்ட 'கடார'(கடாரம்) மலேசியாவின் மேற்குக்கரை இடிபாடுகளாக உள்ளதாக க் குறிப்பிட்டார்.

தற்போது லண்டன் வந்து இலங்கைத்தமிழ் நண்பர்கள் உதவியால் கோவிலில் தங்கிவந்ததாயும் கூறினார். அவர் பின்பு எமது விமானத்திலேயே கோலாலம்பூர் வரை பயணித்தார். ஒரு சிலமணிநேரத்தின்பின் எமது பயணம் கோலாலம்பூரை நோக்கி ஆரம்பமாகியது.

மாஸ்கோ நேரப்படி சுமார் இரவு 12 மணியளவில் விமானம் புறப்பட்டது. பலமணிநேர பறப்பின்பின் புதுடெல்லி இந்திராகாந்தி சர்வதேசவிமான நிலையத்தில் 1மணிநேரம் பயணிகளை இறக்கவும்,ஏற்றவும் நேரம்செலவாயிற்று.விமான நிலையத்தில் பணிபுரியும் தமிழ்நாட்டுத்தமிழர்கள் எம்மை தமிழர் என அறிந்ததும் இன்முகம் காட்டி தமிழில் உரையாடி மகிழ்ந்தனர்.புதுடெல்லி 'சர்வதேசதமிழர்' இணைப்பாளர் கதிர் சம்பத்குமார் அவர்களை 'ரான்சிற் ' கூடத்திலுள்ள தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடியதும்,வியப்பில் ஆழ்ந்துவிட்டார். 'என்ன!நீங்கள் புதுடில்லியில் இருந்தா பேசுகிறீர்கள்? எப்போ வந்தீங்க?வீட்டுக்கு வாங்க! என அழைத்தார். 'நிலைமையை விளக்கி இன்னம் சிறிதுநேரத்தில் விமானம் புறப்பட இருப்பதைக்கூறியதும்,தான் விமானநிலையம் வந்து சந்திப்பதற்கு கூட நேரம் போதாது, என கவலையடைந்தார். 'சரி!கவலைப்படாதீர்கள்!மறுமுறை இந்தியா வரும்போது பார்த்துக்கொள்வோம்! எனதேற்றி விடைபெற்றேன்.(வளரும்)

-என்.எஸ்.பிரபு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
தமிழார்வலர்,எழுத்தாளர்,கல்லூரி,பொதுநூலகமுகவரிகள் தந்துதவுக! தகவல்சேவையில் உங்கள் நாட்டு விபரங்கள் பகிர்க!

# தமிழரின் தலையாய பண்பு

---

டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்,
தமிழ்த்துறை,
அரசினர் கல்லூரி ,
பாலக்காடு,கேரளா.

---

பூவுலகம் என்று தோன்றியது?என்று விஞ்ஞானத்தாலும் விளக்கவியலாத நிலையிலேயே இன்றும் உள்ளது. அவ்வாறிருக்க அதில் தோன்றிய உயிர்களைப்பற்றிய அறிவு இன்னும் வரையறுக்கவியலாத பேரதிசயமாகவே நிலைத்திருக்கிறது.உலகின் பல பகுதிகளிலும் ஒரே காலத்தில் மனித இனம் தோன்றியதா?அன்றி ஓரிடத்தில் தோன்றி உலகின் ஏனைய இடங்கட்கு பரவியதா?என்பதெல்லாம் விடையளிக்கமுடியாதபுரியாத புதிராகவே உள்ளது.ஆயினும் கிடைக்கக் கூடிய சான்றுகளைக்கொண்டு,உலக வரலாற்றினை-அதில் வாழ்ந்துவரும் மனிதர்களின் வரலாற்றினை ஓரளவு உய்த்து உணர்ந்து கூறுவதே காலச்சிறப்புடையதாகும் என்று சான்றோர் பலர் கூறியுள்ளனர்.

ஆதிகாலமனிதன் விலங்கெனவே வாழத்தொடங்கி,அவன் வாழும் சூழலுக்கேற்ப வாழ்க்கை முறையை மேற்கொண்டதன் காரணமாக,இன்று உலகில் பல்வேறு நாகரிகமுடைய மனித இனங்களைக்காணமுடிகிறது. ஆதிகாலத்தமிழருடைய தோற்றம் பற்றியும் வரையறை செய்யப்பட்ட வரலாற்று உண்மைகள் போதியளவு இல்லை.

ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகக் கூறமுடியும்.அதாவது உலகின் வேறு பகுதிகளில் வாழ்ந்த மக்களை விடவும்,நாகரிகமும் பண்பாடும் மிகுந்து,தலைநிமிர்ந்து வாழ்ந்த ஓர் இனமாக தமிழர்களைக்கருதுவதற்கு தடை இல்லை.ஆகவேதான்,தமிழ்க்குடியை, 'கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தே முன்தோன்றிய மூத்த குடி' யாக அறிஞர் பாராட்டியுள்ளனர். ஏற்றம் மிகுந்த இவ்வினத்தின் வளர்ச்சியை,அவ்வினத்தினுடையது என்று கருதுவதற்கான இலக்கிய-இலக்கணங்கள் வாயிலாக ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது.

தமிழரின் மொழி தமிழ்மொழி.'தமிழ்' என்றாலே இனிமை என்றுதான் பொருள். 'தமிழ் தழீ இய சாயலவர்' என்று சீவகசிந்தாமணியும், 'தமிழெனும் இனிய தீஞ்சொற்றயல்'என்று மணிமேகலையும், 'தமிழ்ப்பாட்டிசைக்கும் தாமரையே 'என்று கம்பராமாயணமும், 'இனிமையும் நீர்மையுந் தமிழெனலாகும் 'என பிங்கலநிகண்டும், 'பாலேய் தமிழ் ' என்று திருவாய்மொழியும் இவ்வுண்மையை வலியுறுத்துகின்றன.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் வகுப்பதுதான் முறை.அந்தமுறையில் தமிழ்ப்பெரும் இலக்கண நூலாகிய 'தொல்காப்பியம் ' எனும் பெரும் நூலின் பிறப்புக்களை ஆராய்ந்த பெருமக்கள்,அவ்விலக்கணம் தோன்றுவதற்கு காரணமாய் அமைந்த பல இலக்கியங்கள் தமிழில் இருந்திருக்கின்றன என்றுதான் உரைத்துள்ளனர். ஆனால் அவை கிடைத்தில. கடற்கோள்களால் அவை அழிந்துபோயிருக்கலாம்என்று கருதுகின்றனர். கிடைத்துள்ள நூல்களைக்கொண்டு ஆராயினும்,தமிழர் சிறந்த நாகரிகமுடையவர்களாக-பண்பாடுள்ளவர்களாக வாழ்ந்திருந்தனர் என்பதற்கு ஐயமே இல்லை.

'மொழியே மக்களின் மனத்தைப்பிரதிபலிக்கும் கண்ணாடி'என்பது பல்லோர் கருத்தாயின்(மொழியின் உளவியல்-பில்ஸ்பரி/மீடர்), 'யாதும் ஊரே:யாவரும் கேளிர் ' என்ற தமிழர் கொள்கையை வியக்காமலிருக்கமுடியாது.ஏனெனில்'மொழியின் வாயிலாக வாழ்க்கையை உணர்த்துவதே,இலக்கியம் ' என்று அட்சன் போன்றோர் கூறியுள்ளனர்.(இலக்கிய ஆய்வுக்கு ஒரு அறிமுகம்)

ஒருமொழி வளம்பெறுவதும்,வறுமையுறுவதும்,அம்மொழி பேசும் மக்களின் மனவளத்தை ஒட்டியது,என்று விட்னே கூறுவார்.(மொழியும்:மொழி ஆய்வும்)இந்த அடிப்படையில் நோக்கினும்,தமிழர் பெருமை உலகளாவியது,என்பதே முடிவாகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர் 'என்று பரந்த நோக்கோடு உலகத்தைக்கண்டவர் தமிழர் தம் வாழ்க்கையை அகம்-புறம் என வகுத்துக்கொண்டு,அன்பும்,அறனும் கருவெனக்கொண்டு வாழ்ந்தனர்.

ஒவ்வொரு உயிர்க்கும்அடிப்படைத் தேவைகளில் மிக இன்றியமையாதது உணவுதான்.பெண்ணிலிருந்து பிறந்து வீழ்ந்தது முதல்,மண்ணோடு சேரும் நாள்வரையிலும்,உயிர்பொருந்திய உடலங்கட்கு முதன்மையான தேவை உணவேயாகும்.எனவே தான் இதனைப் பசிப்பிணி என்று,ஒரு தீராத பெரும்நோயாகக்குறித்தனர்.இப்பிணியை உணர்ந்து,பிறருக்குள்ள இந்நோயை ஓரளவேனும் குறைப்பதற்கு முனைந்தவர்கள் தமிழர்.

'உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே ' என்றுணர்ந்து,தம்பசிபோல், பிறர்பசியையும் உணர்ந்து,தீராத அந்நோயைக்குறைப்பதற்கு, நல்லிதயம் கொண்டவர்களைப்பாராட்டி, 'பசிப்பிணி மருத்துவர் 'என்று பட்டம் கொடுத்தனர்.

மனிதரை மனிதராகவேகருதும் உயர்குணம் தமிழரிடையே தலையோங்கி இருந்தது.ஆயிரமாயிரமாக பொருள் தேடிக்குவித்தாலும்,'உண்பது நாழி ' என்றுதான் பழந்தமிழர் கருதினர். ஆகவே தம்முன் உலாவிய உயிரினங்கள் யாவுமே,பசியின்றி வாழ்வதற்கு முடிந்தமட்டும் முயன்றனர்.தம் முயற்சியால் பொருளைத்தேடி,அவைகளை பிறர்க்குப்பகிர்ந்து கொடுத்த செம்மல்களாக விளங்கினர்.

வேளைக்கீரையை உப்பின்றி
அவித்து,பிறர் காண்பரே!

என்று,வாசற்கதவைத்தாழிட்டு, பெருத்த சுற்றமொடு,மனையின் உள்ளிருந்து,சிறிதே அருந்துபவராக-வறுமையில் வாழ்பவராக இருந்துங்கூட, தம் புலமையைக்காட்டி புரவலரிடமிருந்து யானை சுமக்குமளவுக்கு பொருட்களைப் பெற்றுவந்த நிலையில், தம் மனையாளை அழைத்து,அப்பொருளை யாவர்க்கும் வாரிவழங்கி மகிழுமாறு பணித்த உயர்ந்த உள்ளங்களை ப்பார்க்கமுடிகிறது.இந்தப்பண்பாடு,சங்கத்தமிழருடையது என்றில்லாமல்,சில ஆண்டுகட்கு முன்வாழ்ந்த இராமலிங்கவள்ளலார் கூட,வாடிய பயிருக்கு இரங்கும் நல்லோராக வாழ்ந்திருந்தார் என்பது,அவர் உரைத்த 'வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் மனம் வாடி இளைத்தேன் 'என்ற அடிகளால் உணரமுடிகிறது.

தற்காலத்தில் பெண்கள் வாசலில் மாக்கோலம் இழைப்பதும் கூட,சிறு உயிரினங்களாகிய எறும்புகட்கேனும், உணவளிப்பதாகிய நன்முயற்சியே. இவ்வாறு சங்ககாலம் முதல்,தற்காலம் வரை இழையோடிவரும் உணவுப்பிரச்னையை நீக்கமுயல்வதாகிய அறவுணர்வு,தமிழரிடையே மங்கிப்போய் விட்டதைக்கண்டபோது,தற்காலக் கவிஞர் ஒருவருக்கு கழிவிரக்கம் பிறந்தது.தனியொருவனுக்கு உணவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தகவல் சேவை பலாபலன்களை வாசகர்களுடன் பகிரலாம்.சஞ்சிகை தொடர்ந்து பெற விரும்பினால் சந்தா தந்து பதியுங்கள்
உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக!
முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !

லை எனில் சகத்தினை ஒழிப்போம்! என முழங்கினார்.அந்த ஆத்திரத்தாலும் பயன்விளையாததைக்கண்ட புதுக்கவிஞர் ஒருவர்,மிகுந்த வருத்தத்தைக்காட்ட ,இயலாமையைப் பறைசாற்றி, 'வறுமை வெளியேறிற்று-பரட்டைத்தலையும்,எலும்பும் தோலுமாய் ' என்று அங்கதமாய்க்கூறுகிறார்.
இந்த மாற்றத்துக்கு அடிப்படைக்காரணங்கள் பல.
மக்களிடம் ஈகைக் குணம் மங்கியது, ஒரு காரணமாகும்.
'செல்வத்துப்பயனே ஈதல்'என்று பழந்தமிழர் உணர்ந்து செயலாற்றினர். ஆனால் இன்றோ,தாம் மட்டும் வாழ்ந்தால் போதும்!என்ற குறுகிய மன நிலையே பெரும்பாலோரிடம் காண முடிகிறது.
'உண்பது நாழி'என தம் தேவைகட்கு குறுகிய எல்லையை வகுத்துக் கொண்ட பழந்தமிழர்,வறுமையை வாழவிடவில்லை.இன்றோ எங்கும், எதிலும் வறுமையைக்காண்கிறோம்.
'வறுமை ' என்பது இல்லாமையால் அல்ல.இருப்பவற்றில் நிறைவுகொள்ளாமையே ஆகும். 'போதுமென்ற மனமே,பொன்செய்யும் மருந்து 'என்பதைத் தற்காலத்தார் ஏற்றுக்கொள்ளவில்லை.எனவே எங்கும் வறுமை. கூழுக்கு உப்பில்லையே! என்பதும் வறுமைதான்.பாலுக்குத் தேன் இல்லையே! என்பதும் வறுமைதான்.இந்த இருவகையான வறுமைகளில் முதலாவதைப்புரிந்துகொள்ளமுடிகிறது. இரண்டாவது வகை எள்ளலைத் தோற்றுவிக்கிறது.
ஆகவே மனிதரின் அடிப்படைத் தேவைகளையும்,சரிவர நிறைவுசெய்ய வியலாதநிலைமையினையேனும்,கருத்தில் கொண்டு,பொருள்குவிந்திருக்குமிடத்தில்,நீரின் ஒழுக்குப்போல், தேவையுள்ள இடத்துக்கு ஒழுக்குவதே நீர்மையுடைத்தாகும்.
இந்தப் பண்பு உலகமக்கள் மனதில் உருவாகவேண்டும்.உலகமக்களைச் செம்மைப்படுத்த ஆங்காங்குள்ள தமிழர்,முன்னர் குறிப்பிட்ட பழமையான தமிழர்வழிகளைப்பின்பற்றி செயல்பட்டால்,பரந்த உலகினில் எங்கும் எப்போதும், தமிழ்நாட்டை , தமிழர்களைக்கண்டு, உணர்ந்து பயன்பெற்று,நிறைவு அடைய முடியும்! என்பதில் ஐயமில்லை.
உலகமக்கள் முன் தமிழர் செம்மாந்து நிற்கவும் வழிவகுக்கு மன்றோ!

## இலங்கைக்கடிதம்

அன்புச்சகோதரா!
இந்தக்கண்ணீர்க் கடிதத்தை நான் உமக்கு எழுதுவதன் காரணம், 'சர்வதேச தமிழர் 'வாயிலாக ஈழத்தமிழர் பரிதாபநிலையை உலகத்தமிழ் மக்களுக்கு அறியத்தருவதே ஆகும்.
சகல மக்களதும் வாக்குகளைப்பெற்று ஆட்சிக்கு வந்த சந்திரிகா இன்று மாறிவிட்டார்.இவரது ஆட்சியில் நாம் பயந்தநிலையில்,சந்தோசமின்றி,எப்போதும் சாவு நமக்கு துப்பாக்கி முனையில் கதவைத்தட்டுமோ? எனச்சஞ்சலத்துடன் வாழ்ந்து வருகிறோம்.பழைய ஜெயவர்த்தனா; பிரேமதாசா கொடூரகாலம் மீண்டும் விரைவில் நமக்கு வந்தாச்சு!
வயதுவந்த மகன் அல்லது மகள் உள்ள பெற்றோர் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு வாழவேண்டிய நிலை மீண்டும் வந்தாச்சு! பாடசாலை சென்ற பிள்ளை மீண்டும் வருமா?என்ற பயம் மீண்டும் வந்தாச்சு!இராணுவம் பிடித்துச்சென்ற பிள்ளையோ,கணவனோ திரும்பி உயிருடன் வருவது சாத்தியமா?என்பதே சந்தேகமாகிவிட்டது.அவர்கள் உடல் ஆற்றிலா,குளத்திலா என சுழியோட வேண்டியகாலம் வந்தாச்சு!
வெள்ளை வானில் வரும் ஆள்கடத்தல் வீரர்கள் மக்கள் மனதில் பீதியை ஊட்டிவருகிறார்கள்.தம்மை முந்திச் செல்லும் வாகனங்களை மிரட்டியும், வெருட்டியும் அடாவடித்தனம் புரியும், இவர்களுடன் நமது எட்டப்பர் குழுக்களும் சேர்ந்து அட்டகாசம் செய்வதை வரலாறு எப்படி மன்னிக்கும்?
இதைவிட மோசமானது என்னவெனில் தமிழருக்கும்,முஸ்லிம் சகோதரர்கட்கும் இடையே விரோதத்தை ஏற்படுத்தி அதில் குளிர்காயவும் சில குள்ள நரிகள் முயல்கின்றன.
உதாரணமாக மட்டக்களப்பில் புலிகளின் போர்வையில் முஸ்லிம்களை வெளியேறும்படி கூறிய பொய்க் கடிதம்;ஏறாவூர் பகுதியில் முஸ்லிம் மக்களை வெட்டிக்கொன்றுவிட்டு, போராளிகள் மேல் சுமத்தப்பட்ட பொய்க்குற்றச்சாட்டு!இதனால் தமிழ் பேசும் மக்களிடையே எதிரிகள் பிரித்தாளும் தந்திரத்தைக்கையாண்டு பிரிக்க முயன்று வருகிறார்கள்.
மற்றும் தமிழருக்கு பாதுகாப்பு அளிப்பதாகக் கூறிக்கொண்டு,தமிழரை அழிக்கும் தொழிலை வெற்றிகரமாக செய்து வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் போராளிகளுடன் நடந்தபோரில், தேவாலயத்தில் பொதுமக்கள் தங்கியிருந்த இடத்திற்கு குண்டு வீசித்தாக்கிவிட்டு, அனுதாபச்செய்தியும் வானொலியில் கூறும் தலைமைப்பீடம்,தமிழர் உயிரை மனிதஉயிராகவே மதிப்பதில்லை.
இராணுவம் மாணவர்களைப்பிடித்துச் சென்று அவர்கள் அப்பாவிகள் எனத் தெரிந்தும் அடித்துத் துன்புறுத்துவதும்;குடிக்க தண்ணீர் கேட்டால் பெற்றோலை வலுக்கட்டாயமாகக் குடிக்க வைப்பதும்;சோறுடன் தலைமயிரைக்கலந்து உண்ணவைப்பதும் மனிதஉரிமைச்சட்டங்களை காலில் போட்டு மிதிக்கும் செயலல்லவா?
மனிதனுக்கு மனிதன் செய்யும் கொடுமையை யார் தட்டிக்கேட்பர்??
தமிழர்கட்கு அக்கிரமமும்,அநியாயமும் செய்யும்நேரம் சிங்களவர்கட்கு ஆயுதமும்,இராணுவபாதுகாப்பும் அளிக்கிறார்கள்.புலிகள் தவிர்ந்த மற்ற அனைவரும் அப்பாவிப் பொதுமக்கள் என்பதை ஏற்று கொள்ளவில்லை. 1983 இலிருந்தே தமிழர் அவலநிலையை வார்த்தையில் வடிக்கமுடியாது.
இப்போதெல்லாம் தமிழர் உயிர்,பெரும்பான்மையரின் கையிலும்,அவர்தம் தோட்டாவிலுமே தங்கியுள்ளது.
தமிழன் என்று சொல்லடா!தலைநிமிர்ந்து நில்லடா!என்ற கவிஞனின் வார்த்தைப்படி நடந்தால்,நெற்றியை இடித்துக்கொண்டு குறிபார்ப்பது இராணுவதுப்பாக்கி அல்லவா?

'தாய்க்குப்பயம்,வெளியே படிக்கப் போனபிள்ளை உயிரோடுவருமா?என தந்தைக்கு பயம்,வேலைக்குப்போகும் தான் வீடு திரும்புவோமா?என மனைவிக்குப்பயம்,தன் மாங்கல்யம் நிலைக்குமா?என
கன்னிக்குப்பயம்,கற்பு எனும் உடைமை பறிபடாது இருக்குமா? என அண்ணனுக்குபயம்.பரீட்சைக்குமுன் கைதும்,சாவும் அழைக்குமா?என தமிழிற்குப்பயம்,உலகம் அழியும்வரை தான் நிலைத்து நிற்கமுடியுமா?என '

இதுவே இன்றைய ஈழத்தமிழர்நிலை.
உலகத்தமிழர் அமைப்புகள்,நெதர்லாந்திலுள்ள சர்வதேச நீதிமன்று;ஐ.நா மனிதஉரிமை கமிசன்;ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில்,சர்வதேச மன்னிப்புச் சபைக்கு இராணுவ மனிதஉரிமை மீறல்களை ஏன் முறையிடக்கூடாது?

**துன்பத்தில்—ஈழத் துச்சகோதரி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐம்பதுவருடங்களும் அணுகுண்டும்

ஐம்பதுவருடங்கள் பறந்துவிட்டது. உலக வரலாற்றில் நடந்த போரழிவின் பின்பு ஐம்பது வருடங்கள் பறந்துவிட்டது. நாம் இரண்டாம் உலக மாகயுத்தத்தை என்றும் மறக்கமுடியாது. என்று சொல்லிக் கொண்டாலும் எமது இளைய சமுதாயத்திற்கு அதன் உண்மை புரியாமையும் . பலர் அதை மறந்து போவதும் . புதிய நாசிகள் போன்ற அமைப்புக்கள் புலப்படுவதும். உலகம் மீண்டும் எங்கே செல்கின்றது என்கின்ற கேள்வியை எழுப்புகிறது. அழிவுகளின் கொடூரத்தை எமது இளைய சமுதாயம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். வருங்காலத்தில் உலகம் அவ்விதமான அழிவுகளை அடையாது பாதுகாக்க வேண்டும்.

நாகசாகி . கிறோசிமா என்னும் இடங்களை அறியாதவர்கள் இருக்க முடியாது. அந்த இடங்களில் அணுகுண்டால் ஏற்பட்ட . ஏற்படுகின்ற அழிவையும் அனைவரும் அறிந்திருப்பார்கள். அணுவாயுதங்களும், அணு மின்நிலையங்களும் மனிதன் கணித்ததைவிட அதிக அழிவை ஏற்படுத்தியதோடு அதை கட்டடக்கும் சக்தியும் மனிதனிடம் முழுமையாக இல்லை என்பது வெட்ட வெளிச்சமாக்கியது.

அணுவாயுதங்கள் . அணுமின்னிலையங்கள் ஆகியவற்றால் ஏற்படும் அழிவுகளை நன்கு அறிவதோடு . அவற்றுக்கு எதிராக நாம் போராடவேண்டியது முக்கியதோர் கடமையாகும். எம்மை மாத்திரம் அல்ல மனித குலத்தின் எதிர்காலச் சந்ததிகளையும் காப்பாற்ற இது முக்கியமான செயற்பாடாகும். அணுமின்னிலையங்கள் அதிக மின்சாரத்தை உற்பத்தி செய்தாலும் அதன் கதிர்வீச்சால் எப்படிப் பட்ட அழிவுகள் ஏற்படும் என்பதற்கு **செனோபில்** நல்ல உதாரணமாகும்.

அணுகுண்டைக் கண்டுபிடித்து உலகத்தை திகிலுக்குள் தள்ளிவிட்டவர்கள் அமெரிக்கர்கள் தான். 16 — 07 — 1945 இல் நியூ மெக்சிக்கோ பாலைவனத்தில் முதலாவது அணுகுண்டு பரீட்சாத்திக்கப்பட்டது. இந்தப்பரிசோதனைக்கான சங்கதப் பெயர் **திரிநிற்றீ** என்பதாகும். இதைக் கண்டுபிடிக்க முன்நின்று பாடுபட்டவர் **றொபெட் ஒப்கெய்மர்** என்னும் விஞ்ஞானி ( 1904 — 1967)ஆவார் .

யுத்தம் முடிந்தபின்பு இவர் அணுசக்தியை அமைதி வழிகளில் பிரயோகிக்கப் பாடுபட்டார். பிற்காலத்தில் அணுகுண்டை கண்டுபிடித்ததிற்காக வருத்தப்பட்ட இவரை அமெரிக்க அரசு சோவியத் உளவாழியெனச் சந்தேகப்பட்டது. கடுமையான வேதனை . விரக்தியை . குற்ற உணர்வை, பிற்காலத்தில் அனுபவித்து . புற்றுநோயால் காவலிலேயே இறந்தார்என்பது வேறுகதை.

அதன்பின்பு சோவியத்யூ னியன். இங்கிலாந்து .சீனா . பிரான்ஸ் ஆகியவையும் அணுகுண்டைத் தயாரித்து. உலகத்தை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியது. தற்போது 40 நாடுகளிடம் ஒன்றில் அவர்களிடம் அணுகுண்டு இருக்க வேண்டும் . அல்லது கிட்டத்தட்ட அவர்களால் அதைத் தயாரிக்கமுடியும்.

முதலாவது அணுகுண்டுப் பரிசோதனையின் பின்பும் பல சோதனைகள் நடந்தது. பல மாற்றங்கள் நிகழ்ந்தது. அதன் விளைவுகளால் முந்தையதைவிடப் பலமடங்கு சக்தி வாய்ந்த ஐட்ரஜன், நியுத்துரோன் போன்ற புதிய அணுகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டது. இது உலகத்தை இன்னும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியது.

சோவியத்யூ னியன் முதலாவது அணுகுண்டை 1949ஆம் ஆண்டு பரிசோதித்தது. இப்படிப்பட்ட போட்டிக்கு1940 தொடக்கம் 1989 வரை நீடித்த பனிப்போர் தூபம்போட்டது. 6, ஆம் 15 ஆம் திகதி

ஆகஸ்ட்மாதம் 1945 ஆம்ஆண்டு ஜப்பான்மீது அணுகுண்டுகளை சொல்லாமல் கொள்ளாமல் போட்டு ஜப்பானை அடிபணியவைக்கும்போது 240 000 மனிதர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதில் இருந்து அணுகுண்டின் கொரூரத்தை புரிந்துகொள்ள முடிகிறது.

1962 ஆம் ஆண்டு கியூ பா பிரச்சனை தோன்றியது. இரண்டு வல்லரசுகளுக்கு இடையிலேயான இந்தப் பிரச்சனை கிட்டத்தட்ட ஒரு அணு யுத்தத்திற்கு வழிவகுத்து இருந்தது. ஆனால் தலைபோகும் நேரத்தில் அதில் இருந்து காப்பாற்றப்பட்டது உலகம் செய்த அதிஸ்ரமே. இதன்பின்பு 1963 அணுபரிசோதனையை நிறுத்துவதற்கான ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது. பின்பும் பல ஒப்பந்தங்கள் வந்தன. ஆனால் அவை எத்தனைவீதம் சாத்தியப்பட்டது என்பது கேள்விக்குறியே.

இன்று 17 — 08 — 95 வரை 2007 பரிசோதனைகள் உலகம் பூரா ராகவும் நடத்தப்பட்டுள்ளது. நேற்றும் சீனா தனது பரிசோதனையை நடத்தியது. பிரான்சும் இன்னும் சில நாட்களில் அதை நடத்த இருக்கிறது. இது உலகமக்களிடையே அதிக அதிர்ச்சியை உண்டுபண்ணியது உண்மையே. இந்த விழிப்புணர்வு தொடர்ந்து இருக்க வேண்டும். அத்தோடு நிரந்தரமாக அனைத்து நாடுகளுமே அணு பரிசோதனையை நிறுத்துவதோடு . இருப்பதை அழித்தும் . உலகத்தின் எதிர்காலத்தை நிர்சயப்படுத்த வேண்டும். இது எமக்காகவும் எமது வருங்காலச் சந்ததிக்காகவும் நிச்சயம் சாத்தியப்படவேண்டிய ஒன்று.

— இ. தியாகலிங்கம்.



நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர் இலக்க நிலையம் யுனெஸ்கோ.பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும். தரமான ஆக்கங்கள்,ஓவியங்கள்,புகைப்படங்கள்,காட்டூன்கள் மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேசதமிழரில் வரும் கதைகளின் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர் கடிதங்கள் மிகவும் வரவேற்கப்படும்!
ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக! தங்கள் விமர்சனம், ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்!
ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

# சர்வதேசதமிழர் கவியரங்கம்

## மனிதா! மனிதா!!

பணநாற்றமெடுக்கும்
சேற்றில் ஓய்வாய்ச்சாய்ந்து
உறங்காதே!
மனிதா நீ,
மாயக்கனவில் பறந்துதிரிந்து
மதிமறந்து மயங்காதே!
மனிதா நீ
மனமெனும் ஆட்டை
சொல்லெனும் கத்தியால் அறுக்காதே!
மனிதா நீ
மனிதமனங்களைத்தேடி
சிந்தனைப்பூவாய் மலர்ந்து
நாளை வரும் நாளை
பொன்னாள் ஆக்கு!

**புதுச்சேரி ச.வேல்முருகன்**

---

## பேதலிக்கும் மனிதர்களே!

பெண்குழந்தை பிறந்தால்
பேதலிக்கும் மனிதர்களே!
மருமகள் கிடைக்காமல்
மண்டியிடும் நாள்வரும்!!

ஆட்டுக்குப்பெண்பிறந்தால் மகிழ்ச்சி!
பசுவுக்குப்பெண்பிறந்தால் மகிழ்ச்சி!
கோழிக்குப்பெண்பிறந்தால் மகிழ்ச்சி!
பெண்ணுக்கு பெண்பிறந்தால் இகழ்ச்சி!

பெண்ணுக்கு முன்னுரிமை,
பேரூந்தில் தந்தோம்!
திரையரங்கில் தந்தோம்!
வாழ்க்கையில் தந்தோமா?

உணவு உண்பது,உடை உடுப்பது
உறக்கம்கொள்வது;
இருவருக்கும்பொது!
கற்பு மட்டும்
பெண்ணிற்கு மட்டுமோ?

பெண்ணுரிமை பற்றி
பேசிவிட்டு வந்து
எதிர்த்துப்பேசிய
இல்லத்தரசியை எட்டி உதைத்தார்!

மருமகளை மட்டும்குறிவைத்து
வெடிக்கும் ஸ்டவ் அடுப்புகள்
இந்தியாவில் மட்டுமே தயாராகின்றன!

குழந்தைபிறப்பு கூட வியாபாரமானது:
ஆணை வரவென்றும்,
பெண்ணை செலவென்றும்
முத்திரை குத்துகின்றனர்!

**இரா.இரவி............................மதுரை**

---

## இலட்சியபெண் கிடைத்திடுமா?

கவிதை படித்தேன்கவிதை படித்தேன்!!
வெள்ளிங்கிரியேகவிதை படித்தேன்!
காதலி வேண்டும்-கவிதை படித்தேன்!
வைகாசி இதழில் உன் கவிதைபடித்தேன்
எண்ணம் மறவும்வாழ்வைப்புரியும்!!
பெண்ணினை உணரும்உலகையறியும்!
கண்டிடமாட்டீர்கண்டிடமாட்டீர்!!
நேரிலே நீர் கண்டிடமாட்டீர்!!
எழுதிவிட்டீர்;நீரும் எழுதிவிட்டீர்!!
அழகாய்க் கவிதையை எழுதிவிட்டீர்!!
எண்ணுகிறேன்!நானும் எண்ணுகிறேன்!
'டீன்ஏஜோ?'உமக்கு என எண்ணுகிறேன்
கிடைத்திடும்!அது கிடைத்திடும்!!
கற்பனையில் தான் அது கிடைத்திடும்!!

**சுருதி.................ஒஸ்லோ,நோர்வே**

---

## செம்படவனின் ஆசை!

சிந்திச் சிதறிய கற்பனையை
சிந்தை வழியே சேர்த்தெடுத்து
செவ்வாய் வழியே கவியாக்கி
செப்பிட ஆசை அறிவீரோ!
செம்படவனும் செந்தமிழில்
செழுமைக்கவிகள் படைத்திடணும்!
செல்லுகின்ற இடமெல்லாம்
சேர்ந்தே வந்திடும் சூரியன்போல்
செழுமைக்கவிகள் ஒளிரட்டும்!!
சிந்தனை ஓட்டம் மிளிரட்டும்!!

**அ.நிக்சன்...........சவுதி அரேபியா**

---

## மாந்தர் வாழ்வு துயரம்!

நெஞ்சில் துன்பமுள்ளு
நீண்டே குத்திநிற்கும்
பிஞ்சுமடியில் குந்தி
பெய்யா பால்முலை நோக்கும்!
கஞ்சி காய்ச்சக் கையில்
காசு ஒன்றும் இல்லை
பஞ்சம் பட்டினி வாழ்வில்
பரந்துவிரிந்து செல்லும்!

தட்டிப்படலை மறைப்பு
தரையில் பாய்தான் விரிப்பு
கட்டும்சேலை ரெண்டு
காட்டும் பொட்டு நூறு
பட்டுப்புடவைக்கடையை
பார்வை மேய்ந்து அணியும்
முட்டுப்பட்டோர் வாழ்வு
முற்றும் துயரமாகும்!

அடுப்பில் சட்டி வைக்க
அந்தக்கணமே அங்கு
அடுக்காய் நான்குபிள்ளை
அமர்ந்து வட்டில் தூக்கும்
கொடுத்து மீதி யிருந்தால்
கொதிக்கும் வயிற்றிலூற்றி
படுத்தால் தூக்கம் வருமோ?
பாவியர் வாழ்க்கை சோகம்!

ஓலைக்குடிசைத்திண்ணை
உற்றுநோக்கும் விண்ணை
காலை கிழக்கில் உதயம்
காணும் முன்னே எழுந்து
வேலை தேடி ஓடி
மேனி சோர்ந்து வந்து
மாலை மட்டும் உண்ணும்
மாந்தர் வாழ்வு துயரம்!

**வ.க.பரமநாதன்...........டென்மார்க்**

---

## நல்லதை எடுத்துக்கொள்!

கற்றுக்கொண்டசெயல்களெல்லாம்
காற்றுடனே செல்லாது!
நல்லதை நீ எடுத்துக்கொள்,
நாற்றத்தைக்கழுவிவிடு!
பெற்றுவிட்ட புகழெல்லாம்
பெரிதாய் நீ எண்ணாதே!
பெற்றதெல்லாம் கொஞ்சமென
மற்றதையும் செயல்படுத்து
மூலதனம் போட்டுவிட்டு
மூடனாக இருக்காதே!
மூக்குமேல் விரல் வைத்து
முழுதும் நீ சிந்தித்திடு!
போகாத பொழுது என திரியாதே!
போதாதே பொழுது என உழை!
சேவல் கூவாமல் இருந்தென்ன,
விடியல் விடியாதோ!
நீருக்குள் மீன் அழுதால்
ஊருக்குள் யார் அறிவர்?
சேற்றுக்குள் பூத்தமலர்,
தேருக்குள் பவனிவரும்!
ஊரில் நீ உழைத்துப்பார்
பாரில் உனைப் போற்றிடுவர்!

**இரா.கணேசன்................மதுரை-1**

---

## இமயம் இன்பத்தின் தலைவாசல்

இன்பத்தின் தலைவாசல் இமயத்தில்
துன்பத்தின் நிலை இங்கு இல்லையே
தண்பத்தும் காணாது காட்சிக்கே
விண்பற்றும் தலைவாசல் மாட்சிக்கே!

பனிமூடும் சிகரங்கள் பலவுண்டாம்
இனிவீடும் நமக்கிங்கே சிலவேண்டாம்
முனிநாடும் வனமிங்கே பலவுண்டு
தனிவீடும் கண்டிடலாம் தலம் கண்டு

உள்ளங் கவர் மலர்வகையும்
பள்ளத்தே நல்மணம் பரப்பும்!
கள்ளமில்லா பெண்மக்கள் நலமோடு
தென்னமுதநீர் தருவர் கனிவோடு

நீர்அருவி பலகாணவருவோரும்
சீர்வரிசை இயல்பான தருவாகும்
ஊர்பலதில் பேரோடு மலையிடையே
பார்வியக்கப் புகழோடு வாழ்வோமே

கங்கை,யமுனையும் கைகோர்த்து,புனித
மங்கை எனப்பெயர் பெற்றாளே,தன்
தங்கை கிளைகளுடன் பலவாக
வங்கக்கடல் சேர்வாள் நலமாக!

**என்.ஆர்.இலட்சுமணன்,**
**ஹைதராபாத்-ஆந்திரா**

---

## தமிழா!தமிழா!!

ஏழைநெஞ்சைப்பார்த்து
எழடா தமிழா!
கோழைநெஞ்சம்
கொஞ்சமும் வேண்டா!
மூலைக்குள் முடங்கா
தெழுந்திடுவாயே!
பேழைக்குள்முடங்கி
பயனென்ன தமிழா?

வீரம் நெஞ்சிலிருக்கும் வரை
மனப்பாரம் எதற்கு?
பாரதி சொன்ன வீரம்
போற்றிடு!
நா, ரதி அவனே
நாநிலம் போற்றிடும்

**மாத்தளை தவ.சஜிதரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஈழத்துக்கவிஞர் ச.வே.பஞ்சாட்சரமும் அவர் கவிதைகளும்!

ஈழத்து வடபகுதியில்,காங்கேசந்துறை வீதிக்கு இருமருங்கும்,யாழ்நகரத்திலிருந்து சுமார் 4 மைல் தொலைவில் அமைந்துள்ளது,இணுவில் கிராமம்! இங்கு இசை,இலக்கியம்,நாடகம் போன்ற கலைகட்கு உயிரூட்டுவோர் பலர்!அதில் இலக்கியத்துறைக்கு கணிசமானபங்களித்தவர்,நமது மதிப்புக்குரிய கவிஞர், பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களாவர்.

இவர் இலங்கையில் வெளிவந்த சகல தமிழ்ப்பத்திரிகைகள்,சஞ்சிகைகளில் கவிதை எழுதியதோடு,அவ்வப்போது ஆழமான கருத்தும் நகைச்சுவையும் உள்ள கவிதைத்தொகுதிகளையும் வெளியிட்டு மக்களை மகிழ்ச்சியடையச்செய்தார்.இவர் இளைஞனாக இருந்தபோது எழுதிய 'எழிலி 'எனும் காவியம் இலங்கை சாகித்ய மண்டல பரிசினைப்பெற்றுக்கொண்டது.

இவரது கவிதைகளைப் பாராட்டி ஈழத்து அறிஞர் பலர் புகழாரம் சூட்டியிருப்பது இவரது கவிதைகளின் தரத்தை எடுத்துக்காட்டுகிறது.

அறிஞர் வரிசையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை,புலவர் க.சி.குலரத்தினம்,வித்துவான் இ.திருநாவுக்கரசு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்!

சிறந்த,கடமையுணர்வுள்ள ஆசிரியராகவும் பணிபுரியும் இவர்,உயர்வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் பொருட்டு, 'இலக்கணப்பூங்கா'எனும் புதிய இலக்கண அணுகுமுறை நூலை, 1984 ல் வெளியிட்டார்.

இவரது இலக்கியப் பற்றானது பல திசைகளிலும்,பல்வேறு இலட்சியநோக்குகளுடனும் ஊடுருவிப் பாய்ந்ததை இவருடன் நெருங்கிப் பழகியவர்களால் மட்டுமே உணரமுடியும்.

தனது இலக்கியத்திறமையும்,பற்றும் தன்னுடன் நின்றுவிடக்கூடாது,எனும் பரந்தநோக்கில் இணுவில் கலை இலக்கியக்கழகத்தை உருவாக்கி எண்ணற்ற இளைஞர்களைக்கூட்டி, கவிதை இயற்றவும் கற்பித்து,எண்ணற்ற கவியரங்குகள்,பட்டிமன்றங்கள் போன்றவற்றில் அவர்தம் திறமைகளை வெளிக்கொணர வாய்ப்புகளை ஏற்படுத்தி,ஊக்குவித்து வழிகாட்டியாகத்திகழ்ந்ததை சுட்டிக்காட்டுவதில் நாம் பெருமை அடைகிறோம்.

இவர் கவியரங்குகளில் சிங்கமெனத் தோன்றுகையில் காணும் காட்சி சொல்லுதற்கரியது!தனது மென்மையான காதல்;நகைச்சுவைக்கவிதைகளால் சபையோரை மயக்கி,மகிழ்ச்சி வெள்ளத்தில் தத்தளிக்கச்செய்வதிலும் இவர் வல்லவர் ஆவார்.

கவியரங்கில் தலைமைக்கவிஞனாக எழுந்து நின்று,நகைச்சுவையாக,

'வந்து கவியரங்கில்
வாய்திறந்து பாடுமுன்,
தந்தியடிக்கும் கைகால்கள்! '

என்று ஆரம்பித்ததுமே,சபையோர் ஆர்ப்பரிக்கத்தொடங்கிவிடுவர்.

வேறு சலிப்பான நிகழ்ச்சிகளால், சலிப்புற்று சபையோர் அமைதியிழக்கும்போது,இவர் மேடையில் ஏறி,

'கட்டில் ஒன்று வாங்கினேனே தேவி!

எனத்தொடங்குவார்.கரகோசத்துடன் சபை மறுஅடியைக் கேட்பதற்காக அமைதியாகும்.அவர் தொடர்வார்!

'கட்டில் ஒன்று வாங்கினேனே தேவி!
-கட்டில்,
தொட்டில் ஒன்றுவாங்கியதே ஏவி!
கட்டில் ஒன்று வாங்கியதால்,
தொட்டில் ஒன்று வாங்கியதால்,
வட்டில் பத்து வாங்கிவிட்டேன் தேவி!
இந்த மட்டிலேனும் நிற்குமோ?
தா காவி! '

எவ்வளவு அருமையாக ஒரு குடும்பத்தவனின் கஷ்டநிலையை சில வசனங்களில் விளக்குகிறார்.

மணமாகியதும் கட்டில் ஒன்றை வாங்கியவன்,அதன்பயனாக தொட்டிலையும் வாங்குகிறான்.பின்பு வட்டில் (கோப்பை) பத்து வாங்கவேண்டி ஏற்பட்ட பரிதாபநிலையால்,அந்த மட்டிலாவது காவி உடுத்துவோமா?என எண்ணுகிறான்.இதுபோல இன்னும் ஒரு கவிதையைக்குறிப்பிடலாம்.

'முனியைக்கூடத் தள்ளிவீழ்த்தி
-விட்டார்-எங்கள்,
முத்தரம்மான் வீரனாகிவிட்டார்!
மனிசி கலைக்க ஓடிவந்த நேரம்,
மையிருளில் நடந்திதிந்த வீரம்!

இக்கவிதையினை வஞ்சகப்புகழ்ச்சி அணி என்பர்.அதாவது பயந்தாங்கொள்ளியாக மனைவிக்கு அடங்கி வாழும் முத்தரம்மான் முனியைத் தள்ளிவிட்டது,மனைவி துரத்த ஓடிவரும்போது தற்செயலாக நடந்ததே தவிர ,உண்மையான வீரத்தினால் அல்ல என்கிறார்.இப்படிப்பல கவிதைகள் நகைச்சுவையுணர்வு நிரம்பப் பெற்றவை.

இவர் ஈழத்தமிழ் உலகிற்கு எழிலி, இன்பவானில்,தண்டலை,சின்னஞ் சிறுகதைகள் எனும் நூல்கள் மூலம் நன்கு அறிமுகமானவர்.ஆன்மிக ஈடுபாடும் உள்ள இவர்,முக்கோட்டத் துதி,இணுவை முருகன் பிள்ளைத் தமிழ்,எனும் நூல்களையும் வெளியிட்டார்.இணுவிலில் கோயில் கொண்டருளிய முருகனைப் பிள்ளையாகப் பாவித்து,இனியதமிழில் பொருட்சுவை,பக்திரசம் சொட்டச்சொட்ட பிள்ளைத் தமிழைப்பாடினார்.

காப்பு,செங்கீரை,தால்,சப்பாணி,முத்தம்,வருகை,அம்புலி எனும் பத்துப்பருவங்களில் முருகனைப் பிள்ளையாகப் பாவித்து பாடுவது,மகிழ்வூட்டுகிறது.

இணுவையூரின் இயற்கை அழகையும்,அவர் எடுத்துக்கூறத்தவறவில்லை.

இணுவைமுருகன் கோயிலுக்கருகே ஒரு குளக்கரை உண்டு.இங்கு பனை தென்னை,மா,போன்ற பலவகை மரங்கள் வளர்ந்துசெழித்து நிற்பது, கண்கொள்ளாக்காட்சியாகும்.மழை காலத்தில் குளக்கரை வெள்ளத்தால் நிரம்பியபோது,சிறுவர்கள் மிதக்கும் குற்றிகளில் ஏறிவிளையாடுவர்.

இந்தக்காட்சிகளை அப்படியே இவரது கவிதைகள் படம்பிடித்துக்காட்டுகின்றன.

'மாங்கிளைகள் வளைந்துமண்ணில்
வந்து காய்கள் முத்தமிடும்!
மன்னுகுளக்கரைப்பொழிலில்....... '

'கங்குசெதில்பாய் கருமேனிப்பனை
-களெல்லாம்
காவடிகளாடி களிகூரும் குளக்கரை
-யில் '

'புள்ளொலி குளக் கரைக்குள்
புலம்பெயர்ந்துறையும் வெள்ளம்
புன்தலைச்சிறுவர்கூடிப்
புனையென மிதக்கும் குற்றி
வள்ளங்கள் ஏறியாடும்
வளநகர் இணுவைவேந்தே! ' என்றும்

அழகாக அன்றாடக்காட்சிகளை கற்பனைச் சாற்றில் நனைத்து படைத்திருக்கிறார். இவரின் கவிதைகளைப் பற்றி நிறைய எழுதிக்கொண்டே போகலாம்.இவர் கவிதைகளின் ஆளுமை தமிழ் இதயங்களை ஆட்கொள்ளும் போது எவரும் அதிலிருந்து தப்பமுடியாது.அண்மைக்காலத்திலும் இவர் கவிதைநூல்களை வெளியிட்டுள்ளதைஅறிந்து பெருமையடைகிறோம். எனினும் அவை கைக்கு எட்டவில்லையே என்பது வேதனையாகும்.

இவரின் இலக்கிய,ஆன்மிகபணிகள் நீண்டகாலம் தொடரவாழ்த்துக்கள்!

வ.க.பரமநாதன் – டென்மார்க்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பனிப்பூக்கள்.

காரையூரான்

அனு , நீ அவன நாளைக்கே மறக்கோணும் எண்டு சொல்லேல்ல. நாளையில இருந்து அவன மறக்க முயற்சியம்மா. முதல்ல கஸ்ரமா இருக்கும். மனவேதனையா இருக்கும் . ஆனா நாளடையளவில சரியாயிடும்.

மேசையில் இருந்த சிலகுவளைகளை எடுக்க வந்த அன்னத்திற்கு தந்தையும் மகளும் என்ன பேசுகிறார்கள் என்பதே புரியவில்லை. அன்னம் கேள்விக்குறியாக ஒரு பார்வையை வீசிவிட்டு அங்கிருந்து குவளைகளுடன் நகர்ந்தாள்.

நீ நேற்று அவன்ரவீட்ட போனதுதான் கடைசியும் முதலுமா இருக்கட்டும் என்ன? இனி அவனோட பள்ளிக்கூடத்திலேயும் கதைக்கிறத கொஞ்சம் கொஞ்சமா குறைச்சுக்கொண்டு வந்தியெண்டா நாளடை ,வில அவன நீ மறந்திடலாம்.

என்ன நான் சொல்லுறது விளங்குதா?
ம்.........................
ம்.. எண்டா என்ன அர்த்தம்?
புரியுதப்பா . நீங்க சொன்னது புரிஞ்சுதப்பா.
வெறுப்பு அனுவின் அடித்தொண்டையில் சிக்கித் தவித்தது.
என் குஞ்செல்லே , எங்கட குடும்ப மானமே உன்ர கையிலதான் இருக்கம்மா. அதை நீ நினைச்சாத்தான் காப்பாத்த முடியும். எனக்கு நம்பிக்கை இருக்கு . அனு என்ர சொல்லுக் கேட்டு நடப்பா எண்டு. சரி, நீ இனிப்போய் பாடங்கள கவனமாப் படியம்மா.

தந்தையிடம் இருந்து விலகிவந்த அனுவின் மனம் தவியாய்த் தவித்தது. நினைத்தவுடன் வருவதற்கும் இவர்கள் சொன்னவுடன் மறைவதற்கும் காதல் என்ன கிள்ளுக்கீரையா? காதல் யார்மீது எப்போது எப்படி வருமென்பதே தெரியாது. உண்மைக்காதலுக்கு சாவென்பது மனிதஉடல்கள் அழிவதாலே உண்டாவது இல்லை. காதலின் புனிதம் இவர்களுக்குப் புரியவில்லை. புரிந்தால் முறைப்பையனைக் காதலித்தால் பிரச்சனையில்லை. நீ வெள்ளைக்காறனைக் காதலித்ததுதான் பிரச்சனையென்று கூறமாட்டார்கள். நான் ஸ்தீக்கை வெள்ளைக்காறன்....சீ அந்தச் சொல்லைக் கூறவே வெறுப்பாயல்லவா உள்ளது. அவனும் மனிதன் , நானும் மனிதன் தானே? அவனுக்குள்ளது போலத்தானே எனக்கும் , மனித உடம்பும் உணர்ச்சிகளும் உள்ளன? தோலும் ரோமமும் அவன் காலநிலைக்கேற்ப இசைவாக்கம் அடைந்துள்ளது என்பதற்காக அவன்வேறு நான் வேறு என்பதா? வெள்ளை கறுப்பு நிறங்களில் வித்தியாசப்பட்டால் முயல்கள் முயலாய் இல்லாது மானாகிவிடுமா? மனிதன் நிறமாறிவிட்டால் அவன் மனிதனாகமாட்டானா? ஏன் இந்த மனிதர்களால் இவற்றைப் புரிந்து கொள்ள முடிவதில்லை என்பது ,அனுவிற்கு வேதனை கலந்த விரக்தி சிரிப்பொன்றை வரவழைத்தது.

அவளுள் கேள்விகள் மீண்டும் எக்காளித்தது. என்னால் ஸ்தீக்கை மறக்கமுடியுமா? என்னால் முடியாது. நான் மோகம் கொண்டிருந்தால் தூக்கிஎறியலாம் . ஆனால் காதல் வைத்துவிட்டு அதைக் களங்கப்படுத்த முடியுமா. காதலைக் களங்கப்படுத்துவதாய் எண்ணி என்னை நான் களங்கப்படுத்தவா? காதல் சாகாவரம் பெற்றதாய்த்தான் சரித்திரங்கள் இன்னும் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கின்றன. அதன்மூச்சு என்னிடமும் புகுந்து பலகாலமாகிவிட்டது. என் உயிர் இருக்குமளவிற்கும் எப்போதும் ஸ்தீக் நினைவு என்னைத் தீண்டிக் கொண்டேதான் இருக்கும். ஸ்தீக்.....நிச்சயம் நான் உன்னை மறக்கமாட்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பனிப்பூக்கள்.

காரையூரான்

சிந்தனை சிறகை சியமிழியின்குரல் துண்டித்ததால் துடிப்புற்றாள் அனு.
என்னடி என்ன சொன்னார் அப்பா?
மறக்கட்டாம். அவன மறக்கட்டாம். அவனில நான் வைச்ச நேசத்த மறக்கட்டாம்.
ம்...ம்.....மொத்தில என்னையே நான் மறந்திட்டு நடைப்பிணமாத் திரியட்டாம்.
வேதாந்தம் பேசிவிட்டு விரக்தியாய்ச் சிரித்தாள்.
இதைத்தாண்டி நானும் ஏற்கனவே சொன்னான்.
முடியாதாம் சொல்லுறா அக்கா. எப்பிடி நான் அவனை மறக்கமுடியும்? அவனோட நான் பழகினது ? பேசினது ,ஓ அவன் கண், அவன் பேச்சு,அவன் சிரிப்பு, அவனிலகண்ட ஒவ்வொருவிசயமும் என்மனசில ஆழமா பதிஞ்சிடுச்சு . அதை அழிக்கவும் முடியாது அவன என்னால மறக்கவும் முடியாது.
நீ இப்பிடியே அடம்பிடிச்சியெண்டா கடைசியில நாங்க அனாதையா கண்டவனும் கதைக்கிற மாதிரித் திரியவேண்டியதாகத்தான்....!
அக்கா?!
அப்பா அம்மா இதைப் பொறுத்துக்கொண்டு வாழமாட்டினம். ஒருநாளைக்கு ரெண்டுபேரும் தூக்கில தொங்குவினம். அதுக்குப்பிறகு எங்கட நிலை என்னாகும் எண்டெல்லாம் நான் பிரசங்கம் செய்யத் தேவையில்ல. இதை எல்லாம் நினைச்சா உன்ர காதலுக்கு டாட்டா காட்டலாம் . இதுக்குமேல உன்னரவிருப்பமடி.
என்னக்கா நீயே இப்பிடிச் சொன்னா.......?
அனு எனக்கும் இப்பிடி கற்பன ஆசைகள் ஆயிரமாயிரம் மனசில இருக்கடி. ஆனா அந்த ஆசைகள் கற்பனையில மட்டும்தான் இருக்கோணுமடி. மிஞ்சிமிஞ்சிப்போன கவிதை எழுதலாம் .அதுக்கு மேல துணிஞ்சா அது தப்புத்தாண்டி. கற்பனைக்கும் நிஜ வாழ்க்கைக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கு. கற்பனையில சுகமா இருக்கிறதெல்லாம் நிஜமாகிடாது. நிஜமானாலும் சந்தோசத்தை தராது. எதுக்கும் நீ உன்ன கொஞ்சம் கொஞ்சமா மாத்திக்க. நாளடைவில அவனையும் அவன்ர காதலையும் மறந்திடலாம்.

அதற்குமேல் சியாமிழி போதிக்கவில்லை. அடுக்களையில் இருந்து அழைப்புவர அங்கு சென்று விட்டாள். சியாமிழி பாத்திரங்களைத் துடைப்பதற்கு உதவி செய்தவள் தாய்க்கு கதையோடு கதையாக அனுவை அறிவதற்கும் உதவி செய்து விட்டாள். அன்னத்திற்கு அனல் மேனியில் அனர்த்தம் பண்ணுவது போல இருந்தது. அவளது கோப வெப்பக்கதிர் அனுவை மாத்திரம் நாடிச் செல்லாது சியாமிழியையும் நாடிச் சொன்றது.

ஆனால் அன்னம் சியாமிழியை கண்டபடி பேசவும் விரும்பவில்லை. வயதிற்கு மூத்தபெண்ணைப் பேசி அவள் ஏதாவது ஏடாகூடமாய் செய்து விடுவாளோ என்கின்ற பயத்தில் மௌனமாய் மாய்ந்தவண்ணம் தூய்மைக்கு மாலையிட்டுக் கொண்டிருந்தாள்.

மாலைச்சாப்பாடு முடியவும் அவரவர் தமது படுக்கைகளைநோக்கிச் சென்றனர். சிறிது நேரத்தில் படுக்க எண்ணிச் சென்ற சியாமிழிக்கு அனு முழித்து இருக்கின்றாளா? அல்லது தூங்கிவிட்டாளா என்பது புரியவில்லை என்றாலும் , விளக்கை ஏற்றி அங்கொரு அவதிநிலையை உருவாக்க விரும்பவில்லை. (வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ISSN:0805-7443 SARVADESA TAMILER Vol.2;Nr.7;July-Aug 1995


BLAD

சர்வதேசதமிழர்

Editor:N.S.Pirabu,B.Sc.,Dip.Journalism(U.K.)
L.Hervigs vn.69A,3035 Drammen,Norway.
Tl./Fx.32.813416;E.mail:nsp@oslonett.no

Subscription/yr: Scandinavia:180,-NKr;Srilanka/India:12USD;U.K.:12£;France:60Fr;Germany:24DM; Canada:18CD;Swiss:24Fr;Austrlia:24AD;K.S.A.:36SR;Singapore/Malaysia:24SD;Others:20USD

Postgiro:0823 0899 453 Bankgiro:6066 1012 199




# நீல வானத்தில் நிலைத்த பயணம்

அண்மையில் மாஸ் விமானப் பணிப் பெண்களாக பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்ற சிலருக்கு நற்சான்றிதழ் வழங்கப்பட்டது. இதில் இரண்டு இந்தியப் பெண்களும் பயிற்சி சான்றிதழ் பெற்றனர். இந்த பயிற்சியில் கலந்து தேர்ச்சி பெற்றவர்களில் இவர்கள் இருவர் மட்டுமே இந்தியப் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. விமானப் பணி பெண்களாக அங்கீகரிக்கப்பட்டு நற்சான்றிதழ் பெற்ற மகிழ்ச்சியில் திளைத்திருந்த இவர்களைச் சந்தித்து உரையாடிய போது:

## லதா ராமன்

நான் எஸ்.பி.எம். படித்து முடித்து விட்டு வேலை தேடிக் கொண்டிருந்தேன். அந்தக் காலக் கட்டத்தில் எந்த வேலையையும் செய்யத் தயாராக இருந்த போதிலும் எனக்கு விமானப் பணிப் பெண்ணாக வர வேண்டும் என்பதே லட்சியம். அதற்காக மனு செய்து விட்டு காத்திருக்கும் தருவாயில் வேறு வேலையைத் தேடிக் கொண்டிருந்தேன். ஆனால் மற்ற வேலையைச் செய்வதற்கு எனக்கு மனமில்லை.

அந்த வேளையில், நான் எதிர்பார்த்தபடியே எனக்கு மாஸ் விமானப் பணி பெண் நேர்முகப் பேட்டிக்கு அழைப்பு வந்தது.

நம்பிக்கையோடு போய் வந்தேன். முடிவைக் கடிதம் மூலம் தெரியப்படுத்துவதாகச் சொன்னார்கள். எனது சொந்த ஊர் பினாங்கு மாநிலமாக இருந்த போதிலும் வாய்ப்பு கிடைத்தால் கோலாலம்பூர் வந்து விடலாம் என்று எண்ணியிருந்தேன். நான் எதிர்பார்த்தபடியே எனக்கு விமானப் பணிப் பெண் பயிற்சியில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. கோலாலம்பூர் வந்து கடந்த ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையில் மூன்று மாதம் பயிற்சி பெற்றேன். மூன்று மாதத்திற்குப் பின்னர் எனக்கு பயிற்சி சான்றிதழ் கிடைத்து உள்ளது. நான் ஏப்ரல் மாதம் உள்ளூர் விமானப் பணி பெண்ணாக ஒரு வருடம் தொடர்ந்து பயிற்சி பெறுவேன். பின்னர் மீண்டும் ஒரு மாதம் படிக்க வேண்டும். அதன் பிறகுதான் நான் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியும்" என்று கூறினார், 21 வயதான லதா.

அவரது குடும்பத்தைப் பற்றி கேட்ட போது, "என் அப்பா ஒரு கம்பெனியில் பாதுகாவலராக உள்ளார். அம்மா வீட்டில் தான் இருக்கிறார். நான் வீட்டிற்கு ஒரே செல்லப் பிள்ளை. அதனால் அப்பா எனது விருப்பத்திற்கு தடை சொல்லவில்லை. இவ்வேலை எனக்கு கிடைத்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். மேலும் என்னுடன் மற்றொரு இந்தியப் பெண்ணும் இருப்பதால் மனதுக்கு ஆறுதலாகவும் அளவற்ற மகிழ்ச்சியாகவும் உள்ளது" என்று சிவஜாவை சுட்டிக் காட்டினார்.

## சிவாஜா தேவன்.

என் சொந்த ஊர் சித்தியவான், பேராக். என் அப்பா ஒரு தோட்டத்தில் துணை நிர்வாகியாகப் பணியாற்றி ஓய்வு பெற்று விட்டார். வீட்டில் நான் இரண்டாவது பிள்ளை. அதுவும் ஒரே ஒரு பெண் பிள்ளை. அண்ணனுக்கு திருமணமாகி விட்டது. தம்பி படிக்கிறார். அம்மா வீட்டில் இருக்கிறார். விமானப் பணிப் பெண்ணாக ஆக வேண்டும் என்பது எனது நீண்ட நாளைய லட்சியம். நான் விமானப் பணிப் பெண்ணாக ஆக வேண்டும் என்று எனது அம்மாவும் ரொம்ப ஆசைப்பட்டார். வாய்ப்பு கிடைத்தது. பயிற்சி பெற்றேன். இப்போது சான்றிதழ் கிடைத்து விட்டது.

நான் பயிற்சிக்காக புருணை, சபா, பினாங்கு போன்ற ஊர்களுக்கு விமானத்தில் சென்று இருக்கிறேன். ஆரம்பத்தில் உள்நாட்டில் பணியாற்ற முடியும். ஒரு வருடம் நன்கு பயிற்சி பெற்ற பின்னர்தான் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியும்" என்று சொன்னார் 23 வயதான சிவாஜா.

விமானப் பணிப் பெண்ணாக ஆவதற்கு நமது இந்தியப் பெண்கள் ஆர்வம் காட்டி வருவது குறைவாக இருந்தாலும் ஒரு சிலருக்கு வாய்ப்பு கிடைத்துதான் வருகிறது. அந்த வகையில் இவர்கள் இருவருக்கும் ஒரு சபாஷ் போடலாம்.

- எஸ்.எம். குணாளன்

படங்கள்: தா. பெருமாள்

நன்றி: நயனம் : 8

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்